Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

தமிழ்Mirror
www.tamilmirror.lk
FRIDAY, JULY 15, 2022

வெள்ளிக்கிழமை ஜூலை 15, 2022 | ஒளி: 08கதிர் 049 | பக்கம்:08 | வடக்கு,கிழக்கு | Free




# நாட்டுக்கு நாடு பறக்கிறார் கோட்டா

நாட்டை விட்டு தப்பிச்சென்றிருக்கும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தனது மனைவி மற்றும் மெய்ப்பாதுகாவலர்கள் இருவருடன் ஜித்தாவுக்கு பறக்கவிருப்பதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. இது தொடர்பில் சர்வதேச ஊடகங்களும் செய்தி வெளியிட்டுள்ளனர்.

தொடர்ச்சி P2

கொழும்பு அரசியலில்

# அதிரடி திருப்பம்

ஜனாதிபதி, பிரதமர் மற்றும் அரசாங்கத்துக்கு எதிரான போராட்டங்களின் வீரியம் நேற்று (14) குறைந்திருந்தது. இந்நிலையில், கொழும்பு அரசியலில் அதிரடியான திருப்பங்கள் பல இடம்பெறலாம் என தகவல்கள் வெளியாகியுள்ளன.

அந்த திருப்பங்களை மேற்கொள்ளும் போது, எதிர்ப்புகள் கிளம்பாத வகையிலும் அதனை தடுக்கும் வகையிலுமே, கொழும்பு நிர்வாக எல்லைக்குள் ஊரடங்குச் சட்டம் இன்று (15) காலை 5 மணிவரையிலும் அமுல்படுத்தப்பட்டதாக அந்தத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

தொடர்ச்சி P2

## இராஜினாமா கடிதம் வந்தடைந்தது

மாலைதீவிலிருந்து சிங்கபூருக்கு தப்பியோடி ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, தனிப்பட்ட விஜயமாக வந்துள்ளார் என்றும், அடைக்கலம் கோரவில்லை என்றும் சிங்கபூர் வெளிவிவகார அமைச்சு அறிவித்துள்ளது.

இந்நிலையில், தனது இராஜினாமா கடிதத்தை, நேற்று (14) மாலை உயர் அதிகாரி ஒருவரின் ஊடாகவே அனுப்பியிருந்தார் என நேற்று (14) இரவு 7 மணிக்கு செய்திகள் வெளியாகியிருந்தன.

தொடர்ச்சி P2



## கடுமையான அறிவிப்பை விடுத்தது இராணுவம்

பா.நிரோஸ்

பாராளுமன்றத்துக்கு முன்பாக நேற்று முன்தினம் (13) இடம்பெற்ற பதற்றமான நிலைமையைக் கட்டுப்படுத்தச் சென்றிருந்த இரு இராணுவ வீரர்களை போராட்டக்காரர்கள் தாக்கியுள்ளதுடன், அவர்களிடமிருந்து டி-56 ரக துப்பாக்கிகள் இரண்டையும் போராட்டக்காரர்கள் பறித்துச் சென்றுள்ளனர்.

தொடர்ச்சி P2

## வெளிநாட்டுக்கு நாங்கள் இன்றுவரை போகமாட்டோம்

முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, முன்னாள் நிதி அமைச்சர் பசில் ராஜபக்ஷ, நிதி அமைச்சின் முன்னாள் செயலாளர் எஸ்.ஆர்.ஆட்டிகல ஆகியோர் இன்று வரையில் (15) நாட்டை விட்டு வெளியேறப்போவதில்லை என உயர்நீதிமன்றத்துக்கு நேற்று (14) அறிவித்துள்ளனர்.

தொடர்ச்சி P2

## சபை இன்று கூடாது: தலைவர்கள் கூடுவர்

பா.நிரோஸ்

பாராளுமன்றத்தை அவசரமாக இன்று (15) கூட்டவேண்டுமென கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் ஏற்கெனவே இணக்கம் காணப்பட்டிருந்த போதிலும் இன்றையதினம் பாராளுமன்றம் கூடாதென தெரிவிக்கப்படுகின்றது.

தொடர்ச்சி P2



கலவரத்தை கட்டுப்படுத்த

## ஆயுதப்படைகளுக்கு அதிகாரம்

நாட்டின் பொதுச் சொத்துக்களை பாதுகாக்கும் நோக்கத்திலும், பொதுமக்களுக்கு பாதுகாப்பை வழங்கும் வகையிலும் வன்முறைக்காரர்களுக்கு எதிராக செயற்பட பாதுகாப்பு படையினருக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. குறிப்பாக போராட்டக்காரர்களின் வன்முறை செயற்பாடுகள் தொடர்ந்தால் அதனை கட்டுப்படுத்த ஆயுதப்படைகளுக்கு இவ்வாறு சட்டபூர்வமாக அதிகாரம் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

தொடர்ச்சி P2

## டீசல் கப்பல் இன்று வரும்

பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் ஏற்பட்டுள்ள எரிபொருள் தட்டுப்பாட்டை அடுத்து 40,000 மெட்ரிக் தொன் டீசல் நிரப்பிய கப்பல் நாட்டை இன்று (15) வந்தடையவுள்ளதாக இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது. அடுத்தவாரம் டீசல் கப்பலொன்றும் வருமெனவும் நிறுவனம் அறிவித்துள்ளது. இன்று (15) வரும் கப்பலுக்கான உரிய கொடுப்பனவுகள் முன்கூட்டியே செலுத்தப்பட்டுவிட்டது என்றும் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.

தொடர்ச்சி P2



## தூதுவர்கள் ரணிலுக்கு அழுத்தம்

### அமைதியின்மையை வன்மையாக கண்டிக்கிறது சர்வதேசம்

அரசாங்கத்திற்கு எதிராக போராட்டக்காரர்கள் முன்னெடுக்கும் தொடர்ச்சியான போராட்டத்தை அடுத்து சர்வதேச நாடுகளின் அவதானம் இலங்கை பக்கம் திரும்பியுள்ள நிலையில், இலங்கை அரசாங்கத்தின் மீது அழுத்தங்களை பிரயோகிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

## பிரதமர் பதவிக்கு சஜித்தை பரிந்துரைக்க தீர்மானம்

மக்களின் ஜனநாயக ரீதியிலான போராட்டங்களை அடுத்து ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடியை சமாளிக்க புதிய பிரதமர் ஒருவரை நியமிக்குமாறு பதில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ள நிலையில், சகல எதிர்க்கட்சிகள், சிவில் அமைப்புகளின் இணக்கத்துடன் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவின் பெயரை சபாநாயகரிடம் இன்றைய தினம் பரிந்துரைக்க எதிர்க்கட்சி தீர்மானித்துள்ளது.

தொடர்ச்சி P2



## கோட்டாவுக்கு சர்வதேச பிடியாணை யோசனை

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை சர்வதேச பிடியாணை பிறப்பித்து கைது செய்யுமாறு பிரித்தானியா பாராளுமன்றத்தில் யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது. லிபரல் டெமாக்ரட் கட்சியின் தலைவர் எட் டேவி இந்த யோசனையை முன்வைத்துள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

தொடர்ச்சி P2

## அடக்குமுறைகளை அனுமதிக்க முடியாது




பா.நிரோஸ்

நிறைவேற்று அதிகாரங்கொண்ட ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ கடந்த ஐந்து நாட்களாக எங்கிருக்கிறார் என்பதே தெரியவில்லை என தெரிவிக்கும் தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத்,

தொடர்ச்சி P2

## இந்தியா கவனம் செலுத்தவில்லை

இலங்கையின் தற்போதைய நிலைமைகள் உணர்வுபூர்வமானதாக அமைந்துள்ளது. ஆகவே இந்த நேரத்தில் இலங்கைக்கு பொருளாதார ரீதியிலான ஒத்துழைப்புகளை வழங்குவது குறித்தே இந்தியா சிந்திப்பதாகவும், இலங்கையின் ஏனைய விடயங்கள் குறித்து கவனம் செலுத்தவோ, அது குறித்து கவலைப்படவோ



இல்லை எனவும் இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2

## கூட்டு இணக்கப்பாட்டுடன் இருவரையும் தெரிவு செய்க

நாடு எதிர்கொண்டுள்ள நெருக்கடிக்கு தீர்வுகாண அனைவரும் இணைந்து செயற்படாவிட்டால் நாங்கள் அனைவரும் அழிவை நோக்கி செல்வதை யாராலும் தடுக்க முடியாது போகும். ஆகவே, அரசியல் கட்சிகள் பிளவுபட்டுக்கொள்ளாமல் கூட்டு இணக்கப்பாட்டுடன் ஜனாதிபதி, பிரதமரை தெரிவுசெய்துகொள்ள நடவடிக்கை எடுக்கவேண்டும் என பெப்ரல் அமைப்பு




தெரிவித்துள்ளது.

கட்சித் தலைவர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு பெப்ரல் அமைப்பின் நிறைவேற்று அதிகாரி ரோஹண ஹெட்டி ஆரச்சி விடுத்திருக்கும் அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

கட்சித் தலைவர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களிடம் நாங்கள் கேட்டுக்கொள்வது, இடைக்கால அரசாங்கத்தின் ஜனாதிபதி மற்றும் பிரதமர் தெரிவுசெய்துகொள்ளும்போது அரசியல் கட்சிகள் அனைத்தினதும் இணக்கப்பாட்டுடன் தெரிவுசெய்துகொள்ளவேண்டும்.

தொடர்ச்சி P2

## குருந்தூர் மலையில் சட்டவிரோதமான விஹாரை உள்ளிட்டவற்றை அகற்றவும்

சண்முகம் தவசீலன்

குருந்தூர் மலையில் சட்டவிரோதமாக அமைக்கப்பட்ட விஹாரை உள்ளிட்ட அனைத்து கட்டுமானங்களையும் அகற்றுமாறு முல்லைத்தீவு நீதிமன்றம் அதிரடி உத்தரவு

தமிழர்களின் பூர்வீக வழிபாட்டிடமான முல்லைத்தீவு - தண்ணிமுறிப்பு, குருந்தூர் மலை ஆதி சிவன் அய்யனார் ஆலய வளாகத்தில் சட்டவிரோதமாக அமைக்கப்பட்ட விஹைரை உள்ளிட்ட அனைத்து கட்டுமானங்களையும் அகற்றுமாறு குறித்த கட்டுமானங்களை



அகற்றி நீதிமன்றுக்கு அறிக்கை சமர்ப்பிக்குமாறும் உத்தரவிட்டுள்ளது.

அத்துடன், அந்தப் பகுதியில் ஆதி சிவன் அய்யனார் ஆலயத்தினர் தங்களுடைய வழிபாடுகளை மேற்கொள்வதற்கு எந்த விதத்திலும் தடை விதிக்க கூடாது எனவும் இந்த இடத்தில் அமைதிக்கு பங்கம் ஏற்படாத வகையில் பொலிஸார் உரிய பாதுகாப்பினையும் வழங்க வேண்டும் எனவும் முல்லைதீவு நீதிமன்றம் அதிரடி உத்தரவை பிறப்பித்துள்ளது

குருந்தூர்மலை தொடர்பான AR 673/18 என்ற குறித்த வழக்கு நீதிமன்றில் முல்லைதீவு நீதவான் நீதிமன்ற நீதிபதி ரி.சரவணராஜா முன்னிலையில் நேற்று (14) எடுத்துக்கொள்ளப்பட்டது.

ஆதிசிவன் ஐயனார் ஆலய நிர்வாகத்தினர் மற்றும், முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரன்,

தொடர்ச்சி P2

## ஜனாதிபதி பதவிக்கு போட்டியிடத் தயார்

பா.நிரோஸ்

பாராளுமன்றத்தில் பெரும்பான்மையானோர் என்னை ஜனாதிபதி வேட்பாளராக பரிந்துரைத்தால், பெரும்பான்மைக்கு தலை வணங்கி அதனை ஏற்றுக்கொள்வேன் என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் பீல்ட் மார்சல் சரத் பொன்சேகா தெரிவித்தார். ஐக்கிய மக்கள் சக்தியை புறந்தள்ளவிட்டு, மொட்டுச் கட்சியிலிருந்து வரும் அழைப்பை ஏற்பதற்கு தான் தயாராக இல்லை எனவும் அவர் கூறினார்.

கொழும்பில் நேற்று (14) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனை தெரித்துள்ளார். பதில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஒரு பொம்மை போன்றவர். ஜனாதிபதி வேட்பாளராக ரணில் விக்கிரமசிங்கவையே ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன முன்மொழியவுள்ளது. போராட்டக்காரர்களினால் கைப்பற்றப்பட்ட அரச சொத்துக்களை உரிய நேரத்திலேயே போராட்டக்காரர்கள் விடுவித்திருக்க வேண்டும் எனவும் தெரிவித்தார்.

இராணுவ வீரர்கள் தங்களது பணிகளை செய்ய வேண்டும் என்பது எமக்குப் புரிகிறது. எனினும் தங்களது பணிகளை முன்னெடுக்கும்போது பொதுமக்களின் பாதுகாப்பே பிரதானம் எனவும்,

தொடர்ச்சி P2

# அதிரடி திருப்பம்

இதேவேளை, போராட்டங்கள் முன்னெடுக்கப்படுமாயின் அவற்றை இரும்புப் பிடிக்குள் வைத்து கட்டுப்படுத்துவதற்காக, இராணுவத்தினர் முக்கிய இடங்களில் களமிறக்கப்பட்டுள்ளனர்.

அத்துடன், இராணுவ கவச வாகனங்களும் கொழும்பின் சில வீதிகளில் ரோந்து பணிகளில் நேற்று (14) பிற்பகல் முதல் ஈடுபடுத்தப்பட்டன. கொழும்பு அரசியலில் மாற்றங்களை கொண்டுவருவதற்கான பேச்சுவார்த்தைகள் யாவும், கடந்த சில தினங்களாகவே முன்னெடுக்கப்பட்டிருந்தன. அதன் அடுத்தடுத்தகட்டப் பணிகள் இன்று (15) முதல் முன்னெடுக்கப்படும் என அறியமுடிகின்றது.

## இராஜினாமா கடிதம் வந்தடைந்தது

அந்தக் கடிதம் தொடர்பில் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டதன் பின்னர், முதலாவதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தனது பிரதமர் பதவியை இராஜினாமா செய்வார். அதன்பின்னர் பிரதமர் நீதியரசர் முன்னிலையில் பதில் ஜனாதிபதியாக பதவியேற்பார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

பதில் ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க பதவியேற்றதன் பின்னர், புதிய பிரதமராக தினேஷ் குணவர்தன, பதில் ஜனாதிபதியின் முன்னிலையில் பிரதமராக பதவியேற்றுக்கொள்வார். இவையெல்லாம் நேற்று (14) இரவே நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

## கடுமையான...

ஆகவே, பறித்துச் செல்லப்பட்ட துப்பாக்கிளைக் கொண்டு மேலும் வன்முறைச் சம்பவங்களில் ஈடுபடலாம் என்பதால் பொதுமக்கள் அவதானத்துடன் இருக்க வேண்டுமென இராணுவ ஊடகப் பேச்சாளர் பிரிகேடியர் நிலந்த பிரேமரத்ன நேற்று (14) தெரிவித்துள்ளார்.

பதற்றத்தை கட்டுப்படுத்த சென்றிருந்த இராணுவ வீரர்களில் இருவரை அங்கிருந்த போராட்டக்காரர்கள் இரும்புக் கம்பிகள், தடிகளைக் கொண்டு மயக்கம் வரும் வரையில் மிகக் கடுமையாக தாக்கியுள்ளனர்,

இதன்போது இரு இராணு வீரர்களிடமிருந்தும் இரு டி-56 ரக துப்பாக்கிளையும் போராட்டக்காரர்கள் பறித்துச் சென்றுள்ளனர். இராணுவ வீரர்களின் இருவரது முகம், தலையில் மோசமாகத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இருவரும் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை பறித்துச் செல்லப்பட்ட துப்பாக்கிளைக் கொண்டு மேலும் வன்முறைச் சம்பவங்களில் ஈடுபடலாம் என்பதால் பொதுமக்கள் அவதானத்துடன் இருக்க வேண்டும் எனக் கேட்டுக்கொண்டார்.

## அடக்குமுறைகளை...

பதில் ஜனாதிபதி ஒரு பாசிசவாதியெனவும், இராணுவத்துக்கு அதிகாரங்களை வழங்கி அடக்குமுறைகளை மேற்கொள்வதை அனுமதிக்க முடியாது என்றார்.

தேசிய மக்கள் சக்தியின் தலைமையகத்தில் நேற்று (14) ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவித்த போதே அவர் இவ்வாறு கூறினார்.

ரணிலும், கோட்டாவும் பதவிகளில் இருந்து விலகும் வரையில் நாட்டில் ஏற்பட்டுள்ள பதற்றமான நிலைமையை கட்டுப்படுத்த முடியாது. நாட்டில் இரத்த ஆறு ஓடுவதற்கு இடமளிக்கவும் வேண்டாம். அடுத்து என்ன நடக்குமென நினைத்து மக்கள் அமைதியற்ற குழப்பத்தில் இருக்கிறார்கள். இவற்றுக்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவே காரணம் என்றார்.

ஜனாதிபதி பதவி விலகுவார் என சபாநாயகருக்கு அறிவித்திருந்தார். கடந்த 9ஆம் திகதிக்குப் பின்னர் ஐந்து நாட்கள் கடந்துள்ள நிலையிலும் எமது நாட்டின் நிறைவேற்று அதிகாரம்கொண்ட ஜனாதிபதி எங்கிருக்கிறார் என தேடிக் கண்டுப்பிடிக்க முடியவில்லை. அவர் எங்கிருக்கிறார் என நாட்டு மக்களுக்கு தெரியவில்லை. சபாநாயகரிடம் வினவினாலும் அவரும் தனக்கு தெரியாது என்றே கூறுகிறார்.

இவ்வாறான நிலையில் அரசியலமைப்பின் பிரகாரம் ஜனாதிபதி பதவி விலகவில்லை. ஜனாதிபதி தனது பணிகளை ஏன் முன்னெடுக்க முடியவில்லை என்பதை சபாநாயகருக்கு அவர் அறிவிக்க வேண்டும்.

## வெளிநாட்டுக்கு நாள்கள்...

டிரான்ஸ்பெரன்ஸி இன்டெர்நெசனல் ஸ்ரீலங்கா உள்ளிட்ட மூன்று தரப்புக்கள், முன்னாள் பிரதமர், முன்னாள் நிதி அமைச்சர், நிதி அமைச்சின் முன்னாள் செயலாளர், மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் உள்ளிட்ட அறுவரை நாட்டை விட்டு வெளியேறாது பயணத்தடை விதிக்க வேண்டுமென உயர்நீதிமன்றத்தில் நகர்த்தல் பத்திரம் ஒன்றை தாக்கல் செய்திருந்தன. இலங்கை அந்நியச் செலாவணி கையிருப்பில் ஏற்பட்டுள்ள ஸ்திரத்தன்மை, வெளிநாடுகளில் பெற்றுக்கொள்ளப்பட்ட கடன்களை மீள செலுத்த முடியாமை மற்றும் நாட்டின் தற்போதைய பொருளாதார நிலைமைகளுக்கு மேற்குறித்த அறுவரும் நேரடியாகப் பொறுப்புக்கூற வேண்டுமென தெரிவித்து இந்த நகர்த்தல் பத்திரம் உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இவ்வாறான நிலையில் அஜித் நிவாட் கப்ராலுக்கு இதற்கு முன்னர் இரு தடவைகள் வெளிநாட்டுக்கு செல்வதற்கு தடை உத்தரவு நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்டுள்ளதாக அவர் சார்பாக ஆஜரான சட்டத்தரணி உயர்நீதிமன்றத்துக்கு அறிவித்துள்ளார். அதேபோல் உயர்நீதிமன்றத்தில் அனுமதியில்லாது வெளிநாடு செல்வதற்கான எந்தவொரு திட்டங்களும் கப்ராலிடம் இல்லை எனவும் நீதிமன்றத்துக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை உயர்நீதிமன்றத்தில் நகர்த்தல் பத்திரம் தாக்கல் செய்யப்பட்டதன் பின்னர் கடந்த திங்கட்கிழமை ராஜபக்ஷநாட்டை விட்டு தப்பிச்செல்ல முயற்சித்தமை தொடர்பில் டிரான்ஸ்பெரன்ஸி இன்டெர்நெசனல் உயர்நீதிமன்றத்தின் கவனத்துக்குக் கொண்டுவந்துள்ளது.

## சபை இன்று...

ஜனாதிபதி தான் பதவி விலகுவதாக அறிவிக்காத பட்சத்தில் பாராளுமன்றத்தை கூட்ட முடியாதென்ன பாராளுமன்ற படைக்கல சேவிதர் நரேந்திர பெர்ணான்டோ தமிழ்மிரருக்கு தெரிவித்தார்.

அத்துடன் இன்றைய தினம் கட்சித் தலைவர்களின் விசேட கூட்டமொன்று சபாநாயகர் தலைமையில் நடத்தப்படலாம் இணைய வழியில் எனவும் தெரிவித்தார்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, பதவியிலிருந்து விலகினால் பாராளுமன்றம் இன்று (15) கூடுவதாக அறிவிக்கப்பட்டிருந்தது. எனினும் நேற்று (14) மாலை வரையில் ஜனாதிபதி பதவி விலகுவது தொடர்பான உத்தியோகபூர்வ அறிவிப்புக்கள் எதனையும் வழங்கியிருக்கவில்லை.

## கோட்டாவுக்கு...

இலங்கையின் மிகமோசமான நிலைக்கு ராஜபக்ஷ அரசாங்கத்தின் ஊழல் செயற்பாடுகளும், வரிச்சலுகையும்,மிக அதிகமான பாதுகாப்பு செலவீனங்களும் பாதுகாப்பு தரப்புக்கு அளவுக்கதிகமான அதிகாரங்களை வழங்கியமையுமே காரணம் என அவர் பிரிட்டனின் பொதுச்சபையில் தெரிவித்துள்ளார். இலங்கையின் ஜனநாயகவாதிகளுக்கு ஆதரவளிப்பதற்காக இலங்கைக்கு முழுமையான பொருளாதார அரசியல் தீர்வை வழங்குவதற்காக பிரிட்டன் சர்வதேச சகாக்களுடன் இணைந்து செயற்படவேண்டும் எனவும் அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

ஐ.எம்.எப் மற்றும் ஏனைய தரப்புடன் இணைந்து உடனடி ஆதரவை நாம் வழங்க வேண்டும், அத்துடன் கோட்டாபய மற்றும் அவரது சகாக்கள் கைதுசெய்யப்பட வேண்டும், அதற்கான சர்வதேச பிடியாணை உட்பட அரசியல் காரணிகளை உள்ளடக்க வேண்டும் எனவும் அவர்

தெரிவித்துள்ளார். அரசியல் பொதியில் தமிழர்கள் முஸ்லிம்கள் உட்பட அனைவரினதும் மனித உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதை உள்ளடக்கவேண்டும் எனவும் அவர் ண்டுகோள்விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## தூதுவர்கள்...

இந்நிலையில் இலங்கையில் உள்ள சர்வதேச நாடுகளில் தூதுவர்கள் பதில் ஜனாதிபதியாக கடமை பொறுப்பேற்றுள்ள பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடனும் தற்போதைய நிலைமைகளை கேட்டறிந்து வருவதுடன், ஆலோசனைகளையும் வழங்கி வருவதாக தெரிய வருகின்றது. இந்நிலையில் ஊரடங்கு, தாக்குதல் போன்ற செயற்பாடுகளையும் தவிர்க்குமாறு ரணிலுக்கு அழுத்தம்கொடுத்துள்ளனராம்.

நேற்று முன்தினம் (13) மற்றும் கடந்த 9ஆம் திகதிகளில் ஆர்ப்பாட்டக்காரர்களினால் முன்னெடுத்த பாரிய அரச எதிர்ப்புப் போராட்டங்களை அடுத்து ஜனாதிபதி நாட்டை விட்டு வெளியேறியுள்ள நிலையில் , அது குறித்தும் ஆர்ப்பாட்டக்காரர்களின் நியாயமான கோரிக்கைகள் குறித்தும் சர்வதேச நாடுகள் மற்றும் அமைப்புகள் குரல் எழுப்ப ஆரம்பித்துள்ளன. குறிப்பாக ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகம் அன்டோனியோ குட்டரெஸ், தான் இலங்கையின் நிலைமைகளை உன்னிப்பாக அவதானித்து வருவதாகவும், இந்த போராட்டத்திற்கான அடிப்படை காரணத்தையும், போராட்டக்காரர்களின் நியாயமான கோரிக்கைகளையும் கருத்தில் கொண்டு அதனை நிவர்த்தி செய்ய வேண்டியது அவசியம் என தெரிவித்துள்ளதுடன், அமைதியான மற்றும் ஜனநாயக மாற்றத்திற்கான சமரச மனப்பான்மையை ஏற்றுக்கொள்ளுமாறு அனைத்துக் கட்சித் தலைவர்களையும் தான் கேட்டுக்கொள்வதாகவும் தெரிவித்துள்ளார்.

பிரித்தானியாவின் ஆசியா மற்றும் மத்திய கிழக்கு நாடுகளுக்கான அமைச்சர் அமண்டா மில்லிங், இலங்கையின் நிலவரம் குறித்தும் அதற்கான காரணம் குறித்தும் பிரித்தானிய பாராளுமன்றத்தில் சுட்டிக்காட்டியுள்ளார். நீண்டகால யுத்த சூழ்நிலை, முறையான பொறுப்புக்கூறல் மற்றும் நல்லிணக்க பொறிமுறையின் தோல்வியின் காரணமாகவே இலங்கை இவ்வாறான நிலைமைகளை எதிர்கொள்ள நேர்ந்துள்ளதாக தெரிவித்துள்ளார். அதேபோல் தற்போதைய சூழ்நிலையில் இலங்கையின் அரசியலமைப்பிற்கு அமைவாக அமைதியானதும் ஜனநாயகமானதுமான முறையில் உரியவாறான நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு பிரிட்டன் ஆதரவு வழங்கும் என இலங்கைக்கான பிரித்தானிய உயர்ஸ்தானிகர் சாரா ஹல்டன் தெரிவித்திருந்தார். அதேபோல், நாட்டில் சட்டவாட்சியை உறுதிப்படுத்துமாறு இலங்கைக்கான அமெரிக்க தூதரகம் வலியுறுத்தியுள்ளது.

## நாட்டுக்கு நாடு...

மாலைதீவுக்கு தப்பிச்சென்றிருக்கும் இவர்கள், அங்கிருந்த தனி விமானத்தின் ஊடாக, சிங்கபூருக்கு நேற்று (14) மாலையே சென்றடைந்துள்ளனர்.

சிங்கப்பூரில் இருந்தே சவுதி அரேபியாவில் உள்ள ஜித்தாவுக்கு செல்லவிருப்பதாக அந்தத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## ஆயுதப்படைகளுக்கு...

பாதுகாப்பு படைகளின் பிரதானி ஜெனரல் சவேந்திர சில்வா, பொலிஸ்மா அதிபர் மற்றும் முப்படை தளபதிகள் நேற்று முன்தினமும், நேற்றும் சபாநாயகர் மற்றும் பதில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடனும் கலந்துரையாடியிருந்தனர். தற்போது போராட்டக்காரர்கள் முன்னெடுக்கும் போராட்டத்தினால் ஏற்பட்டுள்ள அரச சொத்து சேதங்களை இனியாவது தடுக்கும் விதமாகவும், பொதுமக்களின் சுதந்திரம், செயற்பாடுகளை தங்கு தடைகளின்றி முன்னெடுக்கும் சூழலை உருவாக்கிக்கொடுக்க வேண்டும் எனவும் பதில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பாதுகாப்பு படைகளின் பிரதானிக்கு தெரிவித்திருந்தார்.

இந்நிலையில் சபாநாயகர் மற்றும் கட்சி தலைவர்களிடத்தில் பாதுகாப்பு படைகளின் பிரதானி இந்த விடயங்களை தெரிவித்திருந்த நிலையில், பாதுகாப்பை பலப்படுத்த வேண்டும் ஆனால் எக்காரணம் கொண்டும் பதில் தாக்குதல் அல்லது, ஆயுத பிரயோகங்களை முன்னெடுக்கவே கூடாது என்ற நிலைப்பாட்டில் சபாநாயகரும், கட்சி தலைவர்களும் பதில் தெரிவித்திருந்தனர். அத்துடன் பாராளுமன்ற வளாக போராட்டத்தின் போதும் எக்காரணம் கொண்டும் ஆயுதங்களை பயன்படுத்தக்கூடாது என பாதுகாப்பு படைகளுக்கு அறிவித்திருந்தனர்.

எனினும் பதில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் ஆலோசனைகளுக்கு அமைய, பொதுச் சொத்துக்களை பாதுகாக்கும் நோக்கிலும், பொதுமக்களுக்கான அமைதியான சூழலை உருவாக்கிக்கொடுக்கும் நோக்கத்திலும் போராட்டக்காரர்களின் வன்முறை செயற்பாடுகள் தொடர்ந்தால் அதனை கட்டுப்படுத்த ஆயுதப்படைகளுக்கு சட்டபூர்வமான அதிகாரம் வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

மேலும், அனைத்து வகையான வன்முறைகளிலிருந்தும் உடனடியாக விலகிக்கொள்ளுமாறும் அல்லது வன்முறைகளில் ஈடுபடும் போராட்டக்காரர்கள் எதிர் தாக்குதல்களில் பாதிக்கப்படக்கூடும் எனவும் இதன்போது போராட்டக்காரர்களுக்கு எச்சரிக்கப்பட்டுள்ளது. அத்துடன் மனித உயிர்களுக்கு அச்சுறுத்தல் விளைவிக்கும் நபர்களுக்கு எதிராகவும் இராணுவம் தங்களது பலத்தை பிரயோகிக்கும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

கடந்த 9ஆம் திகதி வன்முறை அளவிற்கு தற்போதைய நிலைமைகள் இல்லை என்றாலும் கூட ஒரு சில போராட்டக்காரர்கள் இராணுவத்தின் ஆயுதங்களை கைப்பற்றியுள்ளனர். அத்துடன் சில குழப்பகர செயற்பாடுகளில் ஈடுபட வாய்ப்புகள் உள்ளன.

எனவே இவ்வாறான வன்முறைகள் மற்றும் உயிர் அச்சுறுத்தல் செயற்பாடுகளை தடுக்க பாதுகாப்பு படைகளுக்கு இவ்வாறு அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளதாக இராணுவம் தெரிவித்துள்ளது.

## பிரதமர் பதவிக்கு...

ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற குழு நேற்று(14) காலை எதிர்க்கட்சி தலைவர் அலுவலகத்தில் கூடியதுடன், எதிர்க்கட்சியின் அடுத்தக்கட்ட நகர்வுகள் குறித்தும் தற்போதைய நெருக்கடி நிலைமைகள் குறித்தும் கலந்துரையாடியிருந்தனர்.

குறிப்பாக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நாட்டை விட்டு வெளியேறியுள்ள நிலையில் அவரது பதவி இராஜினாமா இன்னமும் அறிவிக்கப்படாதுள்ளது. இந்நிலையில், அடுத்ததாக முன்னெடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்தே முக்கியத்துவம் கொடுத்து கலந்துரையாடியிருந்தனர்.

பதில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, சபாநாயகரிடத்தில் கேட்டுக்கொண்டதற்கு இணங்க எதிர்க்கட்சிகள் மற்றும் ஏனைய குழுக்களுடன் கலந்துரையாடி இன்று (15) காலை 10 மணிக்கு புதிய பிரதமர் பதவிக்காக முன்மொழியப்படவுள்ள பெயரை சபாநாயகருக்கு அறிவிப்போம் என எதிர்க்கட்சி உறுப்பினர் கலாநிதி ஹர்ஷ டி சில்வா தெரிவித்திருந்தார்.

## இந்தியா கவனம்...

இலங்கையின் உள்ளக விவகாரங்கள், சமூக ஊடகங்களின் கருத்துக்கள் குறித்து எம்மால் பதிலளிக்க முடியாது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

கேரளாவில் செய்தியாளர் சந்திப்பொன்றில் அவர் இந்த விடயங்களை சுட்டிக்காட்டியுள்ளார்.

இலங்கையில் நிலவரம் மிகவும் உணர்வுபூர்வமானதும், அதேபோல் குழப்பகரமானதுமாக காணப்படுகின்றது. நாம் இங்கு பேசிக்கொண்டுள்ள இந்த தருணத்திலும் இலங்கையின் நிலைமைகள் மாறிக்கொண்டுள்ளன என்றே கருதுகின்றோம் . எனினும் இலங்கை எமது அயல் நாடு என்பதால், இலங்கையர்களுக்கு நாம் உதவ விரும்புகின்றோம். நாங்கள் அவர்களிற்கு உதவுவதற்கான அர்ப்பணிப்புடன் இருக்கின்றோம், அவர்கள் மிகவும் நட்புணர்வு மிக்கவர்கள்.

எனினும் இப்போது அவர்கள் மிகவும் கடினமான சூழ்நிலையில் உள்ளனர், ஆகவே நாம் அவர்களுக்கு உதவ விரும்புகின்றோம். நெருக்கடி நிலைமையிலும் கடந்த சில மாதங்களாக நாம் அவர்களுக்கு பொருளாதார ரீதியிலான உதவிகளை வழங்கியுள்ளோம். இப்போதும் எமது நிலைப்பாடு இலங்கையின் பொருளாதார நிலை குறித்தும் எவ்வாறு உதவலாம் என்பது குறித்துமே காணப்படுகின்றது. இலங்கையின் ஏனைய விடயங்களில் நாம் ஈடுபடவில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

## கூட்டு இணக்கப்பாட்டுடன்...

இதன்போது எந்த காரணத்துக்காகவும் வாக்களிக்கும் நிலைக்கு செல்வதை தவிர்த்துக்கொள்ளவேண்டும்.

ஜனாதிபதி, பிரதமர் தெரிவின்போது, தனிப்பட்ட நிகழ்சி நிரல், அரசியல் அல்லது குறுகிய கட்சி அதிகாரத்தை பின்தள்ளிவிட்டு நாட்டுக்கும் மக்களுக்கும் முன்னுரிமை வழங்கி செயற்படவேண்டும். எதிர்வரும் தேர்தலை இலக்குவைத்து இந்த கஷ்டமான நிலையில் தீர்மானம் எடுப்பதை தவிர்ந்துகொள்ளவேண்டும் என்றும் கேட்டுக்கொண்டுள்ளார்.

அதேபோன்று அமைச்சரவையை தெரிவுசெய்துகொள்ளும்போது பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற அனைத்து கட்சிகளில் இருந்தும் ஒருவரேனும் உள்வாங்கிக்கொள்ள நடவடிக்கை எடுக்கவேண்டும். இதன்போது மக்களினால் விரும்பப்படாதவர்களை தெரிவுசெய்துகொள்ளாமல் இருக்க வேண்டும்.

சர்வகட்சி அரசாங்கத்துக்கு ஜனாதிபதி அல்லது பிரதமர் அமைச்சுப்பதவிக்கு உங்களை அழைத்தால் அதனை நிராகரிப்பதை தவிர்ந்துகொள்ளவேண்டும்.

அமைச்சரவையை தெரிவுசெய்துகொள்ளும்போது சம்பிரதாய முறைமையில் இருந்து விடுபட்டு, பிரச்சினைகளை முகாமைத்துவம் செய்வதற்கு இயலுமான குழுவொன்றை தெரிவுசெய்துகொள்வது தொடர்பில் அரசியல் கட்சிகள் கவனம் செலுத்தவேண்டும். அவ்வாறு இல்லாவிட்டால் தற்போது இருக்கும் பிரச்சினை, நாட்டை மீண்டும் கட்டியெழுப்ப முடியாத பாரிய பிரச்சினையை நோக்கி செல்வதை யாராலும் தடுக்க முடியாதுபோகும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## குருந்தூர் மலையில்...

ஆகியோர் சார்பில் சட்டத்தரணி வி எஸ் எஸ் தனஞ்சயன் மற்றும் சட்டத்தரணி கெங்காதரன் முன்னிலையாகியதோடு எதிர்தரப்பிலே பொலிஸார் மன்றில் முன்னிலையாகினர்.

இந்த தீர்ப்பிலே இரு தரப்பு வாதங்களையும் உய்த்தறிந்த நீதிபதி குருந்தூர் மலை பிரதேசத்தில் புதிதாக அமைக்கப்பட்டிருக்கின்ற விஹாரை, சிலைகள் மற்றும் சுருவங்கள் உள்ளிட்ட அனைத்து கட்டுமானங்களும் அகற்றப்பட வேண்டும். புதிதாக அமைக்கப்பட்ட கட்டிடங்களை அகற்றியதன் பின்னர் நீதிமன்றத்தில் அறிக்கை சமர்ப்பிக்க வேண்டுமென முல்லைத்தீவு பொலிஸாக்கு நீதிமன்றம் கட்டளையிட்டது.

## ஜனாதிபதி பதவிக்கு போட்டியிடத்...

இராணுவத்திலும் பொலிஸ் திணைக்களத்திலும் பணியாற்றுபவர்கள் நாட்டின் பொதுமக்களே என்பதை நினைவில் கொள்ள வேண்டும். ஊழல் அரசியல்வாதிகளை பாதுகாப்பதற்குப் பதிலாக நாட்டு மக்களைப் பாதுகாக்க வேண்டும் எனவும் தெரிவித்தார்.



# கையளிப்பும் காத்திருப்பும்

ஜூலை 9 மக்கள் போராட்டத்துக்குப் பின்னர், ஜனாதிபதி மாளிகை, ஜனாதிபதி செயலகம், அலரிமாளிகை ஆகியனவற்றை போராட்டக்காரர்கள் தம்வசப்படுத்தினர். அதன்பின்னர், ஜூலை 13ஆம் திகதியன்று நடத்தப்பட்ட போராட்டத்தின் போது கொழும்பு -7 இல் உள்ள ஜனாதிபதி அலுவலகமும் கைப்பற்றப்பட்டது.

இவ்வாறு கைப்பற்றப்பட்ட பொது கட்டிடங்களை, போராட்டக்காரர்கள், அரசாங்கத்திடம் கையளிப்பதற்கு தீர்மானித்தனர். அதன்பிரகாரம், பிரதமர் அலுவலகத்துக்குள் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருந்தது.


இந்நிலையில், பாராளுமன்ற வளாகத்தில் கடுமையான பாதுகாப்பு ஏற்பாடுகள் (நேற்று) மேற்கொள்ளப்பட்டிருந்தன. கொழும்பில் பல இடங்களில் இராணுவ கவச வாகனங்கள் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தன. (படங்கள்: நிமல் சிறி)







































தற்போதைய நெருக்கடி நிலையில்

# ‘தமிழ் மக்களுக்கு தீர்வு வேண்டும்’

## மதத் தலைவர்கள் வலியுறுத்தல்

வி.நிதர்ஷன்

தற்போதைய நெருக்கடி நிலையில், தமிழ் மக்களின் பிரச்சினைக்கான தீர்வை முன்வைப்பதற்கு அனைத்து பாராளுமன்றப் பிரதிநிதிகளும் ஒன்றுகூடி தீர்க்கமான முடிவெடுக்க வேண்டுமென மதத் தலைவர்கள் கூட்டாக வலியுறுத்தியுள்ளனர்.

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் நேற்று முன்தினம் (13) நடைபெற்ற விசேட ஊடக சந்திப்பிலேயே, சமயத்தலைவர்கள் கூட்டாக வலியுறுத்தியுள்ளனர்.

இது தொடர்பில் அவர்கள் மேலும் அறிக்கையில், “சகல தமிழ்க் கட்சிகளும் குறிப்பாக தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களும் விரைவில் ஒன்றுகூடி இன்றைய இலங்கை அரசியல் சூழலில் எடுக்கவேண்டிய தீர்மானம் என்ன என்பதை சீராகத் தீர்மானிப்பதற்கு முன் வரவேண்டுமெனவும் மதத் தலைவர்கள் தெரிவித்துள்ளனர்.



“வடக்கு, கிழக்கு, மலையகம் மற்றும் தெற்கு என்ற பேதமின்றி தமிழ் பாராளுமன்ற அங்கத்தவர்கள், கட்சித் தலைவர்கள் வேறுபாடுகளைக் கடந்து மக்களுக்காக ஒன்று கூடவேண்டிய தருணம் இது.

“எனவே, அறிவு பூர்வமாக தீர்க்க தரிசனத்தோடு ஒன்றுகூடி ஆராயுங்கள். இது காலத்தின் கட்டாயம். இவ்வேளை நீங்கள் ஒன்றுகூடி ஆராய மறுப்பீர்களானால் அது மாபெரும் வரலாற்றுத் தவறாகும்” என்று தெரிவித்தனர். இந்த ஊடக சந்திப்பில் நல்லை ஆதீன குரு முதல்வர் சோமசுந்தர பரமாச்சார்ய சுவாமிகள், யாழ். மறைமாவட்ட ஆயர் ஜஸ்டின் பேனாட் ஞானப்பிரகாசம், தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தின் தலைவர் கலாநிதி ஆறு. திருமுருகன், ரிஷி தொண்டுநாத சுவாமிகள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

சர்வ கட்சி அரசாங்கத்தில்

# சஜித் ஜனாதிபதி; அநுர பிரதமர்

## கிழக்கிலிருந்து வேண்டுகோள்

எம்.எஸ்.எம். ஹனிபா, பாறுக் ஷிஹான்

சர்வ கட்சி அரசாங்கத்தில், புதிய ஜனாதிபதியாக சஜித் பிரேமதாஸவும், பிரதமராக அநுரகுமார திஸநாயக்கவும் நியமிக்கப்பட வேண்டுமென, அகில இலங்கை அரசாங்க பொது ஊழியர் சங்கம் மற்றும் இலங்கை மக்கள் ஜனநாயக கட்சிகளின் தலைவர் எஸ். லோகநாதன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அகில இலங்கை அரசாங்க பொது ஊழியர் சங்கத்தின் விசேட அதியுயர் பீட கூட்டம், கல்முனையில் உள்ள தலைமை செயலகத்தில் நேற்று முன்தினம் (13) நடைபெற்ற போதே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், “மக்கள் போராட்டத்தின் மூலம்



கோட்டாபய ராஜபக்ஷ விரட்டி அடிக்கப்பட்டுள்ளார். புதிய ஜனாதிபதி, புதிய பிரதமர் ஆகியோர் நியமிக்கப்படுதல் வேண்டும்.

“நாம் அடையாளம் கண்ட வகையில் சஜித் மற்றும் அநுரகுமார ஆகியோர் இந்நாட்டை தலைமை ஏற்று நடத்துவதற்கு மிகப் பொருத்தமானவர்கள்.

“சஜித் ஜனாதிபதியாகவும், அநுர பிரதமராகவும் நியமிக்கப்பட வேண்டும் என்று நாம் முன்மொழிகின்றோம். இதற்காக ரணில் விக்கிரமசிங்க உடனடியாக பிரதமர் பதவியில் இருந்து விலகி, வழி விட வேண்டும்.

“இந்த அரசாங்கத்தை தீர்மானிக்கின்ற சக்திகளாக போராட்டக்காரர்கள் தொடர்ந்தும் இருந்து இயங்குதல் வேண்டும். அதேபோல் வட, கிழக்கிலும் இவ்வாறான மக்கள் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட வேண்டும்.

“வட,கிழக்கு மக்களை தொடர்ச்சியாக ஏமாற்றி வருகின்ற குறுகிய சுய இலாப தலைமைகளை விரட்டி அடிக்க வேண்டும்” என்றார்.



# மீண்டும் சமையல் எரிவாயு விநியோகம்

எம்.எஸ்.எம் நூர்தீன்

கடந்த ஒன்றரை மாதத்துக்கு பின்னர் மட்டக்களப்பு மாவட்டத்தில் மீண்டும் சமையல் எரிவாயு, நேற்று (14) விநியோகிக்கப்பட்டது.

மட்டக்களப்பு, காத்தான்குடி மற்றும் கல்லடி போன்ற பிரதேசங்களுக்கு சமையல் எரிவாயு போத்தல்கள் வழங்கப்பட்டன.

மட்டக்களப்பு மாவட்டத்துக்கு 4,000 சமையல் எரிவாயு போத்தல்கள் கொண்டு வரப்பட்டு, ஒரு குடும்ப அட்டைக்கு ஒன்று வீதம் பிரித்து வழங்கப்பட்டன.

காத்தான்குடி, ஹிஸ்புல்லாஹ் விளையாட்டு மைதானத்தில் வைத்து காத்தான்குடி பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள குடும்பங்களுக்கு காத்தான்குடி பிரதேச செயலாளர் யு. உதய ஸ்ரீதர் முன்னிலையில் சமையல் எரிவாயுகள் இவ்வாறு விநியோகிக்கப்பட்டன.

இதன்போது பொலிஸார் பாதுகாப்பு வழங்கினர்.




வடமராட்சி தனியார்

# பஸ் சேவை முடங்கியது

எஸ்.தில்லைநாதன்

கடந்த ஐந்து நாட்களாக பருத்தித்துறை சாலையிலிருந்து தனியார் பஸ்களுக்கு டீசல் வழங்காமையால், வடமராட்சியில் நேற்று (14) காலை முதல் தனியார் பஸ் சேவை முற்றுமுழுதாக முடங்கியுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

தனியார் போக்குவரத்துச் சேவைக்கு அந்தந்த சாலைகளிலிருந்து டீசல் வழங்கும் நடைமுறை இருக்கின்ற போதும் பருத்தித்துறை சாலை முகாமையாளரால் கடந்த ஐந்து நாட்களாக டீசல் வழங்கப்படாமையாலேயே பருத்தித்துறை யாழ்பாணம் மற்றும் கொடிகாமம் சேவைகள் முற்றிலும் முடங்கின.



# அமிர்தலிங்கத்தின் நினைவு தினம்

வி.நிதர்ஷன்

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் அப்பாத்துரை அமிர்தலிங்கத்தின் 33 ஆவது நினைவு தினம், தமிழரசுக் கட்சியின் யாழ்ப்பாண அலுவலகத்தில் நேற்று முன்தினம் (13) அனுஷ்டிக்கப்பட்டது.

இந்த அஞ்சலி நிகழ்வில் முன்னாள் வடக்கு மாகாண சபையின் அவைத் தலைவர் சீ.வி.கே.சிவஞானம் கலந்துகொண்டு, சுடரேற்றி, திருவுருவப் படத்துக்கு மாலை அணிவித்தார்.

நிகழ்வில் வலி. தென் மேற்கு பிரதேச சபையின் தவிசாளர் மற்றும் கட்சி உறுப்பினர்கள் உள்ளிட்ட சிலர் கலந்துகொண்டனர்.



எரிவாயு விநியோகத்தின் போது

# பேசாலையில் வீதி மறியல்

எஸ்.றொசேரியன் லெம்பேட்

மன்னாரில் நேற்று (14) லிட்ரோ எரிவாயு விநியோகம் இடம்பெற்ற போது, பேசாலை கிராம மக்கள் பேசாலை பிரதான வீதியை மறித்துப் போராட்டத்தை முன்னெடுத்தனர். இதனால் குறித்த வீதியூடான போக்குவரத்து பாதிக்கப்பட்டது.

மன்னார் பொது விளையாட்டு மைதானத்தில் வைத்து எரிவாயு விநியோகம் இடம்பெற்றது. ஆனால், பேசாலை பகுதி மக்களுக்கு லிட்ரோ எரிவாயு வழங்கும் நடவடிக்கை முன்னெடுக்கப்படாத காரணத்தால் இந்தப் போராட்டத்தை பேசாலை மக்கள் முன்னெடுத்தனர்.

குறித்த மக்கள் நீண்ட காலமாக எரிவாயு இன்றி பல்வேறு இன்னல்களுக்கு முகங்கொடுத்து வந்த நிலையில் இவ்வாறு வீதி மறியல் போராட்டத்தை முன்னெடுத்தனர். இந்நிலையில், பேசாலை பொலிஸார் சம்பவ இடத்துக்கு வந்து, போராட்டத்தில் ஈடுபட்ட மக்களுடன் பேச்சுவார்த்தை நடத்தினர்.

ஐயன்கன்குளம்

# பொலிஸாரை இடமாற்றுங்கள்

## பொது அமைப்புகள் கோரிக்கை

நடராசா கிருஸ்ணகுமார்

முல்லைத்தீவு, ஐயன்கன்குளம் பொலிஸ் நிலையப் பொலிஸார் அனைவரையும் இடமாற்றம் செய்வதற்கு கிளிநொச்சி, முல்லைத்தீவு பிரதிப் பொலிஸ் மா அதிபர் நடவடிக்கை எடுக்க வேண்டுமென பொது அமைப்புகள் கோரிக்கை விடுத்துள்ளன.

“கடந்த 10 ஆண்டுகளுக்கு மேலாக ஐயன்கன்குளம், பழையமுறிகண்டி மற்றும் புத்துவெட்டுவான் ஆகிய கிராமங்களில் இருந்து தொடர்ச்சியாக மணல் மற்றும் மரக்குற்றிகள் கடத்தப்படுகின்றன. கொக்காவில் வீதி வழியாகவே இவை கடத்தப்படுகின்றன.

“புத்துவெட்டுவான் கிராம அலுவலர் பிரிவின் இறுதியில் கொக்காவில் பகுதிக்கு அண்மையாக பொலிஸ் இராணுவம் இணைந்த காவல் அரண் ஒன்றை அமைப்பதன் மூலம் சகல கடத்தல்களையும் தடுக்க முடியும் என கடந்த ஐந்தாண்டுகளுக்கு மேலாக கிராம மட்ட கூட்டங்களில் வலியுறுத்தப்பட்ட போதிலும் குறித்த காவல் அரண் அமைக்கப்படவில்லை.

“மாறாக கடத்தல்காரர்களுடன் ஐயன்கன்குளம் பொலிஸ் தொடர்புகளை பேணுவதன் காரணமாக குற்றச் செயல்கள் கடத்தல்கள் கூடுதலாக இடம் பெறுவதாக எண்ணுகின்றோம்.

“இந்நிலையில், ஐயன்கன் பொலிஸாரை முழுமையாக இடமாற்றம் செய்யவும். கொக்காவில் அண்மித்த பகுதியில் காவல் அரண் ஒன்றை அமைப்பதன் மூலம் கடத்தல்களை கட்டுப்படுத்த முடியும்.

கிளி. அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின்

# புதிய நிர்வாகத்தில் வெளிப்படையில்லை

சுப்பிரமணியம் பாஸ்கரன்

கிளிநொச்சி மாவட்டத்துக்கான அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் புதிய நிர்வாகத் தெரிவு உரிய முறையில் மேற்கொள்ளப்படவில்லை எனத் தெரிவித்து, மாவட்ட வைத்தியர்கள் கையொப்பமிட்ட கடிதம் ஒன்றை, அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் தாய் சங்கத்துக்கு அனுப்பியுள்ளனர்.

கிளிநொச்சி மாவட்டத்துக்கான அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் புதிய நிர்வாகத் தெரிவு தொடர்பில் மாவட்டத்தில் உள்ள வைத்தியர்களுக்கு உரியவாறு அறிவித்தல்கள் எதுவும் வழங்கப்படாது குறிப்பிட்ட சிலரை மாத்திரம் வைத்துக்கொண்டு, இரகசியமான முறையில் புதிய நிர்வாகம் தெரிவுசெய்யப்பட்டதாக அவர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

எனவே, ஜனநாயக முறைப்படி குறித்த மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் நிர்வாகத்தை தெரிவு செய்வதற்கு தாய் சங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரி குறித்த கடிதம் அனுப்பப்பட்டுள்ளது

கிளிநொச்சி மாவட்டத்தில் கடமையாற்றும் மற்றும் மாவட்டத்தைச்

அரசியல் தீர்வை உறுதிப்படுத்தும்

# அரசியல் கட்சிக்கே வாக்களியுங்கள்

கே.எல்.ரி.யுதாஜித்

வடக்கு, கிழக்கு சிறுபான்மை மக்களுக்கு கௌரவமான, உரிமைகளுடன் கூடிய அரசியல் தீர்வை உறுதிப்படுத்தும் அரசியல் கட்சிக்கே பாராளுமன்றத்தில் வாக்களிக்குமாறு, வடக்கு, கிழக்கு ஒருங்கிணைப்புக் குழு கோரிக்கை விடுத்துள்ளது.

குறித்த ஒருங்கிணைப்புக் குழு நேற்று (14) விடுத்துள்ள அறிக்கையிலேயே இவ்விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

அனைத்து தமிழ் அரசியல் கட்சிகளினதும் கவனத்துக்குமாக வடக்கு, கிழக்கு பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு அனுப்பி வைத்துள்ள அக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

“ஜனநாயகமான மக்கள் போராட்டத்தின் மூலம் சர்வாதிகார ராஜபக்ஷ ஆட்சியை முடிவுக்குக் கொண்டுவந்துள்ளனர். இலங்கை மக்கள் எனும் வகையில், நாம் பெருமிதமடைகிறோம். தமிழின அழிப்புக்கும், போர்க்குற்றங்களுக்கும் பொறுப்பான பேரினவாதப் பாதுகாவலர்களான ராஜபக்ஷர்களை மண்டியிடச் செய்த மக்கள் போராட்டத்துக்கு தலை வணங்குகிறோம். “எதிர்வரும் நாட்கள் இலங்கை மக்கள் அனைவரினதும் எதிர்கால அரசியல் மற்றும் உரிமைகள் சார்ந்து தீர்மானகரமான முடிவுகளை எட்டும் நாட்களாகும்.

“இன்றுவரையில், வடக்கு, கிழக்கில் இராணுவமயமாக்கத்தின் காரணமாக ஆயிரக்கணக்கான ஏக்கர் மக்கள் காணிகளும் பொதுக்காணிகளும் இராணுவத்தின் வசம் உள்ளன.

“இராணுவம் சிவில் நிர்வாகத்தில் தலையீடுசெய்வதோடு சிவில் நிர்வாக அதிகாரிகளையும் கட்டுப்படுத்துகிறது. வடக்கு, கிழக்கில் நிழல் இராணுவ ஆட்சி காணப்படுகிறது.



# யானை தாக்கி ஒருவர் பலி

வ.சக்தி

மட்டக்களப்பு மாவட்டத்தின் ஆயித்தியமலை பொலிஸ் பிரிவிலுள்ள நெடியமடு கிராமத்தில் காட்டு யானை தாக்கியதில் நபர் ஒருவர் பலியாகியுள்ளார் என பொலிஸார் தெரிவித்தனர்.

ஆயித்தியமலையில் வசித்து வரும் கோயில்போரதீவைச் சேர்ந்த மு. விசயராசா (54 வயது) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

உன்னிச்சை மாரியம்மன் கோவிலிலிருந்து ஆயித்தியமலையில் உள்ள தனது வீட்டுக்குச் செல்லும்போது, நெடியமடு வைத்தியசாலைக்கு முன்னால் பிரதான வீதியில் நின்ற காட்டுயானை தாக்கியதில் சம்பவ இடத்திலே இந்நபர் பலியானதாக பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணையில் தெரிய வருகின்றது.

இந்தச் சம்பவம் பற்றிய மேலதிக விசாரணைகளை ஆயித்தியமலை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை, இப் பிரதேசத்தில் கடந்த சனிக்கிழமை (09) காட்டு யானை தாக்கியதில் வயல் காவலில் இருந்த விவசாயி ஒருவர் பலியாகியதுடன், அதற்கு முன்னர் சில வாரங்களுக்கு முன் அடைச்சகல் பகுதி ஒருவரும் காட்டுயானை தாக்கி பலியாகியமை குறிப்பிடத்தக்கது.

# புத்தகங்கள் அன்பளிப்பு

எப்.முபாரக்

திருகோணமலை மாவட்ட கங்கத்தலாவ ஐக்கிய ஊடகவியலாளர் ஒன்றியத்தின் முதலாம் ஆண்டு நிறைவை முன்னிட்டு, கந்தளாய் தொழிற்பயிற்சி நிலைய பயிலுனர்களின் நலன் கருதி, அங்குள்ள நூலகத்துக்கு நேற்று (14) புத்தகங்கள் அன்பளிப்புச் செய்யப்பட்டன.

இந்தப் புத்தகங்களை, திருகோணமலை மாவட்ட கங்கத்தலாவ ஐக்கிய



ஊடக ஒன்றியத்தின் பிரதிச் செயலாளர் எம்.எச்.யூசுப், குறித்த பயிற்சி நிலையத்தின் மையப் பணிப்பாளர், பயிற்சி சேவை அதிகாரி சுனில் ரத்நாயக்கவிடம் கையளித்தார்.

தனியாருக்கு செல்லவிருந்த காணி

# லிட்டில்வெளிக்கே கிடைத்தது

## உறுதிப்பத்திரங்களும் வழங்கப்பட்டன

எஸ். யோகா

கண்டி - லிட்டில் வெளி தோட்டத்தில் 2016 ஆம் ஆண்டு தோட்டக் காணியின் ஒரு பகுதி தனியார் ஒருவருக்கு கூறு போட்டு விற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

அதன்போது லிட்டில் வெளி தோட்ட இளைஞர்கள், அதற்கு எதிராக தமது எதிர்ப்புக்களையும் போராட்டங்களையும் நடத்தி வந்தார்கள். பல கட்ட பேச்சு வார்த்தைகள், போராட்டங்கள் என்பவற்றின் பயனாக லிட்டில் வெளி தோட்டத்தில் வசிக்கும் 110 குடும்பங்களுக்கு 8 பேர்ச்சஸ் காணி துண்டுகள் உறுதிப்பத்திரத்துடன் நேற்று முன்தினம் (13) வழங்கி வைக்கப்பட்டது.



இந்நிகழ்வானது, நலன்புரி சங்கத்தின் செயற்பாட்டாளர்களான இராமசாமி, ஸ்ரீசத்தியசீலன், ரவிக்கண்ணன், கலாநிதி பிரபாகரன் போன்றவர்களினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இதன்போது லிட்டில் வெளி தோட்ட மக்களுக்கு வழங்கப்பட்ட காணிகளை போன்று கிறேட்வெளி தோட்ட மக்களுக்கு 3 ஏக்கர் காணி காணியைப் பிரித்து கொடுக்க எதிர்காலத்தில் நீதிமன்றம் ஊடாக நடவடிக்கை எடுக்கப்படும் என ஏற்பாட்டாளர்கள் உறுதியளித்தனர்.

இந்நிகழ்வில் கண்டி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் வேலு குமார், மத்திய மாகாண சபையின் முன்னாள் தவிசாளர் மதியுகராஜா, உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர்.

குயில்வத்த எரிபொருள் வரிசையால்

# போக்குவரத்து பாதிக்கப்பட்டது

இரா.யோகேசன்

குயில்வத்த ஏரிபொருள் நிரப்பும் நிலையத்தில் எரிபொருளைப் பெற்றுக்கொள்ள அதிகளவான வாகனங்கள் வரிசையில் நிற்பதனால், ஹட்டன்- கொழும்பு பிரதான வீதியில் பாரிய வாகனநெரிசல் ஏற்பட்டதுடன், போக்குவரத்துக்கும் தடை ஏற்பட்டது.



பல நாள்களின் பின்னர், குயில்வத்தை எரிபொருள் நிரப்பு நிலையத்தில் நேற்று (14) எரிபொருள் விநியோகிக்கப்பட்டது. இதன்போது, எரிபொருள் வழங்குவதற்கு டோக்கன் வழங்குவதற்காக இரு வரிசைகள் அதிகரிக்கப்பட்டதால், வாகனங்கள் செல்வதில் தடை ஏற்பட்டன.

இதனால் கொழும்பு, கண்டிக்கு இடையிலான போக்குவரத்து பல மணிநேரம் தடைப்பட்டதால், பயணிகள் சிரமத்துக்கு உள்ளாகினர்.

# 3 இலட்ச மரக் கன்றுகள் தானம்

பாலித ஆரியவன்ஸ

பதுளை- அட்டாம்பிட்டிய விவசாய சேவை மத்திய நிலையமானது 5ஆவது தடவையாகவும் “பசுமை தானம்” நிகழ்வை ஏற்பாடு செய்திருந்தது.



பதுளை புராதன முதியங்சன ரஜமஹா விஹைரைக்கு அருகில் இந்த நிகழ்வு நேற்று முன்தினம் (13) ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

அட்டாம்பிட்டிய விவசாய சேவை மத்தியநிலைய பணியாளர் சபையினரால் கடந்த 3 மாதங்களாக உற்பத்தி செய்யப்பட்ட மரக்கறி கன்றுகளே இவ்வாறு விநியோகிக்கப்பட்டுள்ளன.



சீனித் தொழிற்சாலை பணியாளர்களின்

# வீடுகள் புனரமைப்பு

சுமணசிறி குணதிலக

பெல்வத்த சீனி தொழிற்சாலையில் பணிபுரியும் பணியாளர்களின் சேதமடைந்த வீடுகளை புனரமைக்கும் வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்த திட்டத்தின் கீழ், 100 வீடுகள் புனரமைப்பு செய்யவுள்ளதுடன், அதில் முதலாவது கட்டமாக வீடுகளை புனரமைப்பு செய்யப்பட்டு பணியாளர்களிடம் கையளிக்கும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது.

இலங்கை சீனி நிறுவனத்தின் பெலவத்த பிரிவின் பிரதான நடவடிக்கை அதிகாரி மேஜர் வஜிர குமாரதுங்கவின் ஆலோசனைக்கமைய, இந்த புனரமைப்பு பணிகள் முன்னெடுக்கப்படுகின்றன.








# கவனயீர்ப்பு போராட்டம்

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் பிரதமர் ரணில் விக்ரமசிங்க ஆகியோர் பதவி விலக வேண்டும் என வலியுறுத்தி பதுளை நகரில் கவனயீர்ப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. (இரா. சுரேஸ்குமார்)

# ரயில்கள் ஓடின



ரஞ்சித் ராஜபக்ஷ

மலையகத்துக்கான ரயில் சேவைகள் நேற்று (14) வழமையாக இடம்பெற்றதென நாவலப்பிட்டி ரயில் கட்டுபாட்டு நிலையத்தினர் தெரிவித்தனர்.

இதற்கமைய, உடரட்ட மெனிகே, பொடி மெனிக்கே, இரவு தபால் ரயில், விசேட ரயில்கள் என அனைத்து ரயில்களும் வழமைபோல் சேவையில் ஈடுபட்டதாக அவர் தெரிவித்துள்ளார்.

அதேபோல் விசேட ரயில், பொடி மெனிக்கே, உடரட்ட மெனிகே என்பவற்றில் அதிகமான பயணிகள் பயணித்ததாகவும் தெரிவிக்கப்படுகின்றன.





# உலருணவுப்பொதிகள்

நுவரெலியா மாநகர முதல்வர் சந்தனலால் கருணாரட்னவின் விசேட வேண்டுகோளுக்கு இணங்க, சீனா நாட்டின் நிவாரண உதவியின் கீழ், சர்வதேச செஞ்சிலுவை சங்கத்தின் நுவரெலியா கிளையினரின் உதவியுடன் நுவரெலியா மாநகர சபையில் சேவையாற்றும் ஊழியர்களுக்கு உலருணவு பொதிகள் வழங்கி வைக்கப்பட்டன. (பி.கேதீஸ்)

# கட்டணத்தில் குளறுபடிகள்


சேஹ்ன் செனவிரத்ன

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள பாரிய எரிபொருள் நெருக்கடியால் பொது போக்குவரத்து சேவைகள் மட்டுப்படுத்த ப்பட்டுள்ளன.

இதனால் தனியார் போக்குவரத்து சேவைகளில் பயணிக்கும் பொதுமக்களிடம் கட்டுபாடுகளின்றி கட்டணங்கள் அறவிடப்படுவதுடன், மிகுதி பணத்தை வழங்குவதிலும் இழுபறி நிலை ஏற்படுவதால் பயணிகள் அசௌகரியங்களுக்கு முகம் கொடுப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேப்போல் சில தனியார் பஸ்களின் நடத்துனர்கள் தூர இடங்களுக்காக நினைத்தவாறு கட்டணங்களை அறவிடுகின்றனர்.




இதற்கமைய, நாவலப்பிட்டி மற்றும் கம்பளைக்கு இடையில் சேவையில் ஈடுபடும் தனியார் பஸ் ஒன்றில் நாவலப்பிட்டி செல்லும் போது 124 ரூபாய் அறவிடப்பட்டுள்ளதுடன், அதே பஸ்ஸில் கம்பளைக்கு திரும்பும் போது 133 ரூபாய் அறிவிடப்பட்டுள்ளதாக பயணி ஒருவர் தெரிவிக்கின்றார்.

இந்த விடயம் தொடர்பில் குறித்த பஸ் நடத்துனரிடம் வினவியபோது, தாம் கோரும் கட்டணத்தை செலுத்த முடியாவிடின் பஸ்ஸில் இருந்து இறங்குமாறு நடத்துனர் பயணியிடம் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, சில தனியார் பஸ்கள் எரிபொருள் வரிசையில் நின்றாலும் எரிபொருளைப் பெற்று அவர்கள் சேவையில் ஈடுபடாமல், எரிபொருள் விற்பனையில் ஈடுபடும் சம்பவங்களும் பதிவாகியுள்ளன.

இதன்போது ஒரு லீற்றர் டீசல், 1,500 ரூபாய்க்கு திருட்டு தனமாக விற்பனை செய்யப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

# தாயின் சடலம் ஆற்றிலிருந்து மீட்பு



துவாரகஷான்

அக்கரப்பத்தனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கிளாஸ்கோ ஆகுரோவா தோட்டத்தின் ஊடாக மேல் கொத்துமலை நீர்த்தேக்கத்துக்கு நீரேந்தும் ஆக்ரோயா ஆற்றிலிருந்து நேற்று (14) காலை சடலமொன்று மீட்கப்பட்டது.

நான்கு பிள்ளைகளின் தாயான அலமேலு ராஜம்மா (வயது 63) என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

சம்பவதினமான நேற்றுக்காலை 6 மணியவில் இயற்கை உபாதைக்கு செல்வதாக கூறி சென்றவரே, இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார் எனத் தெரிவித்த பொலிஸார், மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் தெரிவித்தனர்.

நீண்ட இடைவெளியின் பின்னர்

# நுரளைக்கு லிட்ரோ

டி.சந்ரு

சுமார் ஒரு மாதத்துக்கு பின்னர், நுவரெலியா நகருக்கு லிட்ரோ சமையல் எரிவாயு நேற்று (14) விநியோகிக்கப்பட்ட நிலையில், அதனை பெற்றுக் கொள்வதற்காக அதிகாலையில் இருந்து நீண்ட வரிசையில் மக்கள் காத்திருந்தனர்.

இதேவேளை, நுவரெலியாவுக்கு விநியோகிக்கப்பட்ட சமையல் எரிவாயு சிலிண்டர்களில் 120 சிலிண்டர்கள், வர்த்தக நிலையங்களுக்கு நேற்றைய தினம் விநியோகிக்கப்பட்டதால்,




வரிசையில் காத்திருந்த நுகர்வோர் பலர் வெறுங்கையுடன் திரும்பும் நிலை ஏற்பட்டது.

# ரக்னாவ நீரில் மூழ்கி இளைஞர் பலி

என்.ஆராச்சி

தெரணியகல- கிரியேன பகுதியிலுள்ள ரக்னாவ நீர்வீழ்ச்சியில் நீராட சென்ற இளைஞர் ஒருவர், நேற்றுமுன்தினம் (13) மாலை நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார்.

இவ்வாறு உயிரிழந்தவர் கிரிவுல்ல-வெவேவத்த பிரதேசத்தைச் சேர்ந்த 24 வயதுடையவர் என்றும் தெரணியகல பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

உயிரிழந்த இளைஞர் இராணுவத்தில் பணியாற்றுபவர் என்றும் நேற்று முன்தினம் (13) மாலை தனது நண்பர்களுடன் நீராடச் சென்ற போதே நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார்.

சடலம் நேற்று முன்தினம் மாலையே கண்டுபிடிக்கப்பட்டதாகவும் மேலதிக விசாரணைகளை தெரணியகல பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.



# கடந்தகால கசப்பான சம்பவங்களை பாடமாகக் கொள்ளவேண்டும்

ஒவ்வொருவரும் தங்களுடைய அதிகாரத்தை தக்கவைத்துக் கொள்வதற்கு கடும் பிரயத்தனம் செய்வதுடன், நாட்குறித்து அறிவிப்புகளை விட்டுக்கொண்டிருக்கின்றனர் என்பது மட்டுமே தெட்டத்தெளிவாக புரிந்துகொள்ள முடிகின்றது. இதனால், அப்பாவி மக்களே நசுக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றனர் என்பதைப் புரிந்துகொள்ளவேண்டும்.

ஜூலை 13ஆம் திகதியன்று தனது இராஜினாமா கடிதத்தைக் கையளிப்பேன் என ஜூலை 9ஆம் திகதியன்று உறுதியளித்திருந்த ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, நாட்குறித்த திகதியில் இராஜினாமாக் கடிதத்தை கையளிக்காமையால், அரசியல் ரீதியில் நெருக்கடியான நிலைமையொன்று ஏற்பட்டுள்ளது. இது பொருளாதாரத்திலும் இன்னுமின்னும் தாக்கத்தைச் செலுத்தும்.

இராஜினாமா கடிதத்தை காலம் தாழ்த்துவதுகூட அதிகாரத்தைத் தக்கவைத்துக்கொள்வதற்கான ஒரு சூழ்ச்சியாகும். இதற்கிடையே பதில் ஜனாதிபதியாக நியமிக்கப்பட்டிருக்கும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிரான கோஷங்கள் வலுப்பெற்றன. பாராளுமன்றத்தை நோக்கிச் சென்றுகொண்டிருந்த ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது கடுமையான தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன.

இதற்கிடையில், பாராளுமன்றத்தை நோக்கிச் சென்றவர்கள் தங்களுடைய குழுவைச் சேர்ந்தவர்கள் இல்லையென போராட்டக்குழுவினர் அறிவித்துள்ளனர். ஆக, நாட்டில் ஒரு ஸ்திரமின்மையை ஏற்படுத்துவதற்கான முயற்சிகளும் முன்னெடுக்கப்படுகின்றன.

“கோட்டா கோ கம”வுக்குப் பின்னர் போராட்டங்களைத் தடுப்பதற்காக, களமிறக்கப்படும் படையினரின் எண்ணிக்கையைப் பார்த்திருந்தால் வியப்படையச் செய்யும். ஆனால், பாராளுமன்றத்தில் பாதுகாப்புக் கடமைக்குச் சென்றிருந்த இராணுவத்தின் துப்பாக்கியும், ரவைகளும் போராட்டக்காரர்களால் அபகரிக்கப்பட்டுவிட்டன என்ற செய்தி, பெரும் அச்சத்தை மூட்டுவதாக அமைந்துள்ளது.

சூழ்ச்சிகள் மூலமேனும் பாதுகாப்புப் படையினர் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டு, பாதுகாப்புத் தரப்பினரால் பதில் தாக்குதல்கள் நடத்தப்படுமாயின் அது இரத்தக்களரிக்கே வழிசமைத்துவிடும். ஆகையால், நின்று, நிதானித்து, பொறுமையாகச் செயற்படவேண்டிய ஒரு தளத்தில் நாமெல்லாம் நின்கின்றோம்.

போராட்டக்காரர்களால் கைப்பற்றப்பட்டிருக்கும் ஜனாதிபதி, அலரி மாளிகைகள் மற்றும் ஜனாதிபதி செயலகத்தில் சில வேண்டத்தகாத சம்பவங்கள் இடம்பெற்றனவென பொலிஸ் தரப்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

சிலவேளைகளில் மக்களுக்காகத் திறக்கப்பட்டதன் பின்னர், மக்களுடன் மக்களாக வரும், சந்தர்ப்பவாதிகளின் செயல்களாகக் கூட இருக்கலாம். எனினும், கைப்பற்றிய அந்த மூன்று இடங்களையும் போராட்டக்காரர்கள் மீளவும் கையளித்துள்ளமை வரவேற்கத்தக்கது. அங்கிருந்த பொருட்களுக்கு சேதங்கள் ஏற்படாமல் கையளித்திருந்தால் அதுவே பெரும் வெற்றியாக இருந்திருக்கும்.

கடந்தவற்றை கதைப்பது பிரச்சினைக்குத் தீர்வாகாது. கடந்தகால சம்பவங்களை ஒரு படிப்பினையாகக் கொண்டு, நிகழ்காலத்துக்கு முகங்கொடுத்து, எதிர்காலத்துக்கான திட்டங்களை வகுப்பதே புத்திசாலித்தனமானது. ஆகையால், தட்டிக்கேட்ட வேண்டிய இடங்களில் மௌனமாய் இருக்காது, நிலைமையை அவதானித்து, பொறுமையை கடைப்பிடிப்பதே சாலச் சிறந்தது என சகல தரப்பினரிடமும் வலியுறுத்துகின்றோம்.


தமிழ்Mirror www.tamilmirror.lk க்கு

எழுதுங்கள்




தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk




## வாழ்வியல் தரிசனம்

நம்பிக்கைகளைப் பாதுகாத்து, மனஉறுதியுடன் அழியாமல் வைத்திருங்கள். நல்லவைகளை நெஞ்சத்தில் இருத்தி, உரமேற்றுங்கள்.

முன்னேறும் பாதையில் நீங்களே உங்களை வழிநடத்திச் செல்லுங்கள். கண்டவர் பேச்சுகளை நம்ப வேண்டிய அவசியமில்லை. கேட்க வேண்டிய பெரியோரிடமே கேட்டு அறியவேண்டும். போராட்டமான வாழ்க்கை இதுவெனக் கலங்குதல் கூடாது.

எதிழர்மறைக் கருத்துகளை சிலர் அள்ளி வீசுவார்கள். கண்டுகொள்ள வேண்டாம். எங்களுக்குள் முடிவு எடுக்கும் திறமை உண்டு. எங்களால் உருவாக்கும் திறமை மிகு கருமங்களை பிறர் தடுக்க முடியாது.

உங்களை நீங்களே நிர்வகித்துக் கொள்க. நீங்களே உங்களை ஆள்பவராவீர்கள். உங்களது செயல்களும் உங்களுக்கெயானது.

எந்த நற்றெயல்களையும் செய்திட கடவுள் ஆசீகள் உண்டு. உங்களுக்குள் பிரவாகிக்கின்ற மகிழ்ச்சி நிலையே, உங்களக்குள் ஒளியூட்டும்.

தற்செயலான இடையூறுகள் சாதாரணமானவை; நிரந்தரமானவை அல்ல. புரிந்து கொள்ளுங்கள் - உருவாக்குபவன் படைப்பாளி. உங்களை நீங்களே நிர்வகித்துக் கொள்க. நீங்களே உங்களை ஆள்பவராவீர்கள். உங்களது செயல்களும் உங்களுக்கெயானது.

பல கருமங்களை உங்கள் மூலம் ஒழுங்காகச் செய்ய இறைவன் ஆணையிட்டுள்ளான். தொடர்ந்து கருமம் ஆற்றுங்கள்.

-பருத்தியூர் பால. வயிரவநாதன்

# முட்டுச்சந்தியில் முனகும் தேசம்



தெ. ஞாலசீர்த்தி மீநிலங்கோ

மக்கள் போராட்டங்களின் வீரியம் என்னவென்பதை இலங்கையர்களும் குறிப்பாக அரசியல்வாதிகளும் உணர்ந்த தருணம் மகத்தானது. ஆனால் இலங்கை அரசியலில் பேரிடர்கள் வரிசைகட்டி நிற்கின்றன. எதிர்கட்சித் தலைவர் ஒருபேரிடர் என்றால் சபாநாயகர் இன்னொரு பேரிடர். எதிர்கட்சிகளும் பாராளுமன்றும் இதன் தொடர்ச்சி. இந்தப் பின்னணியிலேயே இந்நெருக்கடியில் இருந்து மீள்வதற்கான வழிகளை மக்கள் தேடவேண்டியிருக்கிறது. ஹிட்டலராகத் தன்னை உருவகித்துக் கொண்டவர் இறுதியில் கோமாளியாகி நாட்டை விட்டுத் தப்பியோட நேர்ந்திருப்பது அவல நகைச்சுவை. இதை சாத்தியமாக்கிய பெருமை போராட்டக்காரர்களையே சாரும். கடந்த 9ம் திகதி மக்கள் திரள் உறுதியானதும் இறுதியானதுமான செய்தியைச் சொல்லிவிட்ட பிறகும் அரசியல்வாதிகளின் நடத்தையானது யதார்த்தத்திற்கு அப்பாற்பட்டதாக இருக்கிறது. இதுவே இலங்கையின் இன்றைய முக்கியமான நெருக்கடி.

இன்று முனைப்படைந்திருக்கின்ற அரசியல் நெருக்கடியைத் தீர்ப்பதற்கான வலுவோ, மனஉறுதியோ, புத்தாக்கக் கற்பனையோ எந்தவொரு அரசியல்வாதியிடமும் இல்லை. அதேவேளை அரசியல்வாதிகள் கூட்டாக பாராளுமன்றத்திற்கு வெளியே ஒரு தீர்வை மக்கள் தேடிவிடக்கூடாது என்பதில் உறுதியாக இருக்கிறார்கள். போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்த பலர் இப்போது பாராளுமன்றத்தை இயங்க அனுமதியுங்கள், ஜனநாயக முறையில் தீர்வைத் தேடுங்கள் என்று பாடம் எடுக்கத் தொடங்கியிருக்கிறார்கள். இந்த நடத்தை புதிதல்ல. கடந்த மேமாதம் 9ம் திகதி பிரதமர் மகிந்த ராஜபக்ச பதவிவிலகி ரணில் விக்கிரமசிங்க பதவியேற்றபோது பொருளாதாரப் பிரச்சனையைத் தீர்க்க ரணிலுக்கு அவகாசம் கொடுக்கச் சொல்லியும் போராட்டக்காரர்களை அமைதியாக இருக்கும்படியும் கோரியவர்கள் தான் இவர்கள்.

இன்று இலங்கை ஒரு புரட்சிகர மாற்றத்தை நோக்கி நகர்வதற்கான வாய்ப்புகளைத் தன்னகத்தே கொண்டிருக்கிறது. இது தாராண்மைவாத ஜனநாயக விழுமியங்களில் ஊறித்திளைத்தவர்களுக்கு உவப்பானதாக இல்லை. போராட்டக்காரர்கள் அமைதி காக்க வேண்டும், வன்முறையைப் பயன்படுத்தக் கூடாது. சாத்வீகப் போராட்டத்தால் அனைத்தும் சாத்தியம் என்று தொடர்ந்து சொல்லிவருகிறார்கள். ஆனால் இலங்கை நிலவரம் சொல்லும் செய்தி வேறுவகைப்பட்டதாகவே இருக்கிறது. அமைதியான போராட்டக்காரர்களின் மீது வன்முறையை ஏவியது யார் மக்களின் கோரிக்கைகளுக்குச் செவிசாய்க்காமல் அதிகாரக்கதிரைகளில் அமர்ந்திருப்பது யார் போராட்டக்காரர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம், கண்ணீர்ப்புகைப் பிரயோகம், நீர்த்தாரைப் பிரயோகம் என அனைத்து வழிகளிலும் அடக்குமுறைகளை ஏவுவோர் யார். இந்தக் கேள்விகளுக்கான விடையை முதலில் தேடுவோம். பின்னர் போராட்டக்காரர்களுக்கு அறம் பற்றியும் அகிம்சை பற்றியும் பாடமெடுக்கலாம்.

இன்று இலங்கை மூன்று நெருக்கடிகளை எதிர்நோக்குகிறது. முதலாவதும் அடிப்படையானதுமான சட்டம் ஒழுங்கு சார்ந்த நெருக்கடி இரண்டாவது இதற்கு அடிப்படையான அரசியல் நெருக்கடி, முன்றாவது பொருளாதார நெருக்கடி. இதில் கவனிக்கவேண்டியது யாதெனில் மூன்று மாதங்களுக்கு முன்னர் ஒரு பொருளாதார நெருக்கடியாக வெளிப்பட்ட இலங்கையின் சூழலானது பின்னர் அரசியல் நெருக்கடியாகி இன்று சட்ட ஒழுங்கு சார்ந்த நெருக்கடியாகியுள்ளது. இந்த சட்ட ஒழுங்கு நெருக்கடி இரண்டு பரிமாணங்களை உடையது. முதற்பரிமாணம் அரசின் வகிபாகம் குறித்தது. அரசபடைகளினதும் காவற்றுறையினதும் நடத்தை பற்றியது. இரண்டாவது பரிமாணம் போராட்டக்காரர்களின் செயற்பாடுகள் பற்றியது. இவ்விரண்டு பரிமாணங்களும் ஏதோவொரு வகையில் ஒரு உடன்பாட்டுக்கும் ஒத்திசைவுக்கும் வந்தாக வேண்டும். இன்று இவ்விரண்டும் வேறுபட்ட நேரடி முரண்பாட்டுக்கு வழிசெய்யக்கூடிய இலக்குகளால் முன்னகர்த்தப்படுகிறது. இந்நிலை விரைவில் மாற்றமடைய வேண்டும். இல்லாவிடில் இரத்தம் சிந்துவது தவிர்க்கவியலாதாகி விடும்.

இவ்விரு பரிமாணங்களும் ஒத்திசைவாகச் செயற்பட அரசியற்தலைமைகளிடையே விரிந்த பார்வையும் போராட்டக்காரர்களின் கோரிக்கைகள் பற்றிய அக்கறையும் அவசியம். துரதிஸ்ட வசமாக இலங்கையின் அரசியற் தலைமைகளிடையே இதைக் காணக் கிடைக்கவில்லை. இக்கட்டுரை எழுதி முடிக்கும்வரை ஜனாதிபதி பதவி விலகவில்லை. விலகுவதற்கான சாத்தியக்கூறுகளும் தெரியவில்லை. தனது ஜனாதிபதிக் கனவை ரணில் விக்கிரமசிங்க நிறைவேற்றியுள்ளார். இனிப் பிரச்சனை அக்கதிரையில் எவ்வளவு காலம் குந்தியிருப்பது என்பதைப் பற்றியதே.

இலங்கையின் இன்றைய நிலவரம் பல வழிகளில் அரபுவசந்தைத்தை நினைவூட்டுகிறது. அதிலிருந்து நாம் சில பாடங்களைக் கற்றுக் கொண்டு முன்செல்லவியலும். இலங்கையின் நிகழ்வுகள் பலருக்கு அதிர்ச்சியூட்டுவது போலவே 2011இன் அரபுலகக் கிளர்ச்சிகள் பலருக்கு வியப்பூட்டின் சிலருக்கு அதிர்வூட்டின. ஒவ்வொரு தனிமனிதரதும் நிறுவனத்தினதும் வர்க்கம், கருத்தியல், அரசியல் நிலைப்பாடு என்பவற்றுக்கமைய எதிர்வினைகள் வேறுபட்டன. துனீசியாவை உலுக்கிய வெகுசனக் கிளர்ச்சி, மீள எகிப்தில் நிகழ்ந்தபோது, தொற்றக்கூடியதாகத் தோன்றிய அச் சமூக ஒழுங்கீனத்தைப்; பரவவிடின் அது தமக்கு நட்பான மத்திய கிழக்கு ஆட்சிகளை நிலை குலைத்து, மத்திய கிழக்கிலும் அப்பாலும் தமது மூலோபாய நலன்களைக் கெடுக்கலாம் என்பதால், அமெரிக்காவினதும் மேற்கு ஐரோப்பாவினதும் ஆட்சிகள் அதைக் கடுமையாகக் கருத்திற் கொண்டன. இது இன்றைய இலங்கைக்கும் பொருந்தும்.

கடந்த ஒரு தசாப்தகாலமாக உலகெங்கும் இவ்வாறான மக்கள் போராட்டங்கள் நடந்துள்ளன. எதிர்ப்புக்கள் பொதுசன அதிருப்தியை வெளிப்படுத்துவன. அவை தம்மளவிற் புரட்சியின் வித்துக்களாகா என்பதும் அதைப் புரட்சிகரத் தன்மையுடையதாக மாற்றுவது அவசியம் என்பதே நாம் கற்றுக் கொள்ளக்கூடியது. அண்மைக்காலங்களில் ஐரோப்பாவெங்கும் பெரும் ஆர்ப்பாட்டங்கள் நடந்துள்ளன. எனினும், அரசாங்கங்கள் மாறியும், அவை அரசாங்கங்கக் கொள்கைகளில் புறக்கணிக்கத்தக்க தாக்கத்தையே விளைத்தன. கிரேக்கத்தின் பொருளாதார நெருக்கடியைத் தொடர்ந்த நிகழ்வுகள் சிறிது நம்பிக்கையூட்டின, அது நீண்டகாலம் நிலைக்கவில்லை. அதேபோல பொருளதார நெருக்கடியின் விளைவால் ஆர்ஜென்டீனா, லெபனான் போன்ற நாடுகளில் முற்போக்கான மாற்றங்கள் நிகழ்ந்தபோதும் ஆளும் வர்க்கத்துக்குச் சவால் விடுத்து முதலாளிய அரச இயந்திரத்தை எதிர்கொண்டு சமூக மாற்றத்தைக் கொண்டுவரக்கூடிய ஒரு வெகுசன அமைப்பு உருவாக, எதிர்ப்பியக்கம் இன்னும் வெகுதூரம் செல்லவேண்டி இருக்கிறது என்பதே இவ்வனுபங்கள் சொல்லும் பாடமாகும்.

இலங்கையில் முக்கியமாகக் கவனிக்கவேண்டியது யாதெனில் வெகுசன அதிருப்தி எதிர்ப்புக்களாக வெளிப்படும் அதே வேளை, எதிர்ப்பு என்பது முற்போக்காளர்களின் ஏகபோகமல்ல, எதிர்ப்புக்கள் யாவுமே சாராம்சத்தில் முற்போக்கானவையுமல்ல. அதைவி; ட, ஃபாசிஸவாதிகள் உட்படப், பிற்போக்காளர்களும் வெகுசன அதிருப்தியைத் தமக்கு வாய்ப்பாக்கி யுள்ளனர். அரசியற் பொருளாதார நெருக்கடிக் காலங்களில் பிற்போக்கிற்கும் ஃபாசிஸத்திற்கும் உதவும் விதத்தில் வெகுசன அதிருப்தி உற்பத்தியாகியுமுள்ளது. இடதுசாரி, முற்போக்குச் சக்திகள் பலவீனமாயோ நன்கு ஸ்தாபனப்படாதோ இருக்கும் இடங்களிற், தமது நோக்கங்களை ஒப்பேற்றுமாறு பிற்போக்காளர்கள் மக்களை அணிதிரட்டுகின்றனர். 20ம் நூற்றாண்டில் ஐரோப்பாவில் ஃபாசிஸவாதிகள் அதை வெற்றிகமாகச் செய்துள்ளனர். இந்தப் பாதையை இலங்கை தெரியாமல் இருப்பதை நாம் உறுதிசெய்தாக வேண்டும்.

இப்போது எம்முன்னுள்ள கேள்வி யாதெனில்: விரயமிக்க நுகர்வை ஊக்குவிப்பதுடன் நாட்டைக் கடனுக்குட் தள்ளும் விருத்தி பற்றிய கருத்துகளைக் கொண்ட தற்போதைய கொள்கைகளை விலக்கித் தேசியப் பொருளாதார அடிப்படையில் பொருளாதாரப் நெருக்கடிக்குத் தீர்வை முன்வைப்பதும்ளூ அனைத்துத் தேசிய இனங்களதும் சமத்துவத்தினதும் அதிகரப் பரவலாக்கலினதும் சுயநிர்ணய உரிமையினதும் அடிப்படையில் தேசிய இனப் பிரச்சனையை விளிப்பதும்ளூ நாட்டின் இறைமையைப் பாதுகாப்பதும் ஏகாதிபத்திய எதிர்ப்பை உயர்த்திப் பிடிப்பதுமான ஒரு அயற் கொள்கையைக் கடைப்பிடிப்பதுமான ஒரு அரசாங்கத்தையும் ஆட்சியை உருவாக்க எம்மால் என்ன செய்யவியலும் என்பதைச் சிந்திப்பதே அவசரமானதும் அவசியமானதுமாகும்.

நிறைவேற்றதிகாரச் சனாதிபதி முறையால் வக்கிரமடைந்த பாராளுமன்ற சனநாயகம் எனும் ஏமாற்று எவ்வாறு நாட்டை அழிவுப் பாதையிற் செலுத்தியுள்ளது என்பதை மக்கள் முன்னெப்போதையும் விட இப்போது உணர்ந்திருக்கிறார்கள். மாற்று அரசியலின் தேவை முன்னெப்போதினும் அவசரமாக நெருக்குகிறது. அதை நோக்கி நகரப் போகிறோமா அல்லது முட்டுச்சந்தியில் மாட்டிச் சீரழியப்போகிறோமா என்பதே வினா.

பாரளுமன்ற அரசியல்வாதிகளின் நம்பகம் வீழ்கையில், அதிகாரத்துக்கும் பதவிக்கும் சொத்துக்கும் ஆவலால் உந்தப்படும் அவர்களின் பச்சையான சந்தர்ப்பவாதம் அரசியல்வாதிகள் மீது மக்களின் வெறுப்பைக் கூட்டியுள்ளது. இத்தகையதொரு அரசியற் குழப்பச் சூழலில் உண்மையாகவே மக்களை நோக்கிய சாத்தியமானதொரு அரசியல் மாற்று இருப்பின், அது வலியதொரு வெகுசன இயக்கத்தின் தோற்றத்துக்கும் மக்களின் நலனுக்கான அடிப்படை அரசியல் மாற்றத்துக்கும் வழிகோலும்.

## கடிதங்கள்

### மேய்ச்சல் தரவை இல்லை

கால்நடைகளை கட்டுப்படுத்துவதில் உள்ள சிரமங்கள் காரணமாகவே உப- உணவுப் பயிர்ச் செய்கையில் இருந்து விலகி இருப்பதாக அம்பலப்பெருமாள்குளம் விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

கடந்த 12 ஆண்டுகளாக எமது கிராமத்தில் கால்நடைகளுக்கான மேய்ச்சல் தரவை நிலம் இனங் காணப்படாததன் காரணமாக கால்நடைகளை மேய்ச்சலில் ஈடுபடுத்துவதில் சிரமங்களை எதிர்கொண்டுள்ளோம்.

காலபோகம், சிறுபோகம் இரு போகங்கள் பயிர்ச் செய்கை மேற்கொள்ளும் எமது கிராமத்தில் இடைப் போகத்தில் உப உணவுப் பயிர்ச் செய்கை மேற்கொள்ளக் கூடிய நிலையில் குளத்தில் நீர் காணப்படுகின்ற போதிலும் ஆண்டு முழுவதும் கால்நடைகளை மேய்ச்சலில் ஈடுபடுத்த முடியாத நிலைமை காணப்படும்.

எமது கிராமத்தில் கால்நடை வளர்ப்பும் விவசாய உற்பத்தியும் முதன்மையானது. தற்போது ஏற்பட்டுள்ள எரிபொருள் நெருக்கடி காரணமாக சிறுபோக நெற்செய்கையினை அறுவடை செய்ய முடியாத நிலையில் உள்ளோம்.

எரிபொருள் நெருக்கடி தொடருமானால் காலபோக நெற்செய்கையினை கைவிட வேண்டிய அபாய நிலை உருவாகும். எரிபொருளினை பெற்றுக் கொடுப்பதற்கு அதிகாரிகள் விரைவாக நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

நடராசா கிருஸ்ணகுமார்

புதுடில்லி

# 17அன்று 16ஆவது சுற்றுப்பேச்சு

கடந்த 2020-ம் ஆண்டு மே மாதம்

கிழக்கு லடாக் எல்லை பகுதிகளில் சீன ராணுவ வீரர்கள் 2020 மே மாதம் அத்துமீறி நுழைய முயன்றனர். அவர்களை இந்திய ராணுவ வீரர்கள் தடுத்து நிறுத்தினர். இதனால் எல்லையில் பதற்றம் ஏற்பட்டது.



பின்னர் ஜூன் 15 அன்று கல்வான் பள்ளத்தாக்குப் பகுதியில் இருதரப்பு வீரர்களுக்கும் இடையே கடும் மோதல் ஏற்பட்டது. இதில் 20 இந்திய வீரர்கள் வீரமரணம் அடைந்தனர். சீன வீரர்களும் உயிரிழந்ததாக சர்வதேச ஊடகங்கள் தெரிவித்தன.

இந்த மோதலுக்குப் பின்னர் எல்லையில் இரு நாடுகளும் கூடுதல் இராணுவ வீரர்களை நிறுத்தியதால் பதற்றம் அதிகரித்தது. பதற்றத்தைத் தணிக்க இரு நாட்டு ராணுவ உயர்அதிகாரிகள் நிலையில் இதுவரை 15 சுற்றுபேச்சுவார்த்தை நடைபெற்று முடிந்துள்ளது.

இதையடுத்து, இருதரப்பில் இருந்தும் சில பகுதிகளில் நிறுத்தப்பட்டிருந்த வீரர்கள் வாபஸ் பெறப்பட்டனர். எனினும் மேலும் சில பகுதிகளில் வீரர்கள் முகாமிட்டுள்ளனர். இதனால் தொடர்ந்து பதற்றம் நீடிக்கிறது. தற்போது லடாக்கின் பான்காங் ஏரியில் சீன இராணுவம் புதிதாக பாலம் கட்டி வருவதாக தகவல்கள் வெளியாகி உள்ளன.

இந்நிலையில் இந்திய, சீனராணுவ அதிகாரிகள் நிலையிலான 16ஆவது சுற்று பேச்சுவார்த்தை ஜூலை 17ஆம் திகதி நடைபெறவுள்ளது.

ராமேசுவரம்

## ராமேசுவரம் தலைமன்னாருக்கு மீண்டும் கப்பல்

### பாம்பனில் அமைச்சர் எ.வ.வேலு ஆய்வு



ராமேசுவரம் - தலைமன்னார் இடையே மீண்டும் கப்பல் போக்குவரத்து தொடங்குவதற்கான சாத்தியக்கூறுகள் குறித்து மாநில நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு ஆய்வு மேற்கொண்டார்.

பாம்பன் கால்வாயைத் தூர்வாரும் பணி தொடர்பாக பாம்பனில் ஆய்வு செய்த அவர் செய்தியாளர்களிடம் கூறியதாவது:

சாகர் மாலா திட்டத்தின் கீழ் பாம்பன் கால்வாயைத் தூர்வாருவதற்கு மத்திய அரசிடம் வலியுறுத்தப்பட்டுள்ளது. இதற்கு திட்ட அறிக்கை தயார் செய்வதற்கான பணிகளில் ஈடுபட்டுள்ளோம். பாம்பன் கால்வாயை 10 மீட்டர் வரையிலும் தூர்வாரி ஆழப்படுத்தினால் இலங்கையைச் சுற்றிச் செல்லும் வணிகக் கப்பல்கள் பாம்பனைக் கடந்து செல்வதுடன் பயண தூரமும் குறையும்.

> **“ராமேசுவரத்திலிருந்து மீண்டும் தலைமன்னாருக்கு கப்பல் போக்குவரத்தைத் தொடங்கு வதற்கான சாத்தியக்கூறுகள் குறித்த ஆய்வையும் மேற்கொண்டேன்**

மேலும், ராமேசுவரம் அக்னி தீர்த்தக் கடற்கரையில் சுற்றுலாப் பயணிகளுக்கான படகுப் போக்குவரத்தை விரிவுபடுத்துதல், ராமேசுவரம் துறைமுகத்துக்கான நிர்வாக அலுவலகம் அமைப்பது மற்றும் ராமேசுவரத்திலிருந்து மீண்டும் தலைமன்னாருக்கு கப்பல் போக்குவரத்தைத் தொடங்கு வதற்கான சாத்தியக்கூறுகள் குறித்த ஆய்வையும் மேற்கொண்டேன், என்றார்.

சென்னை



## தேம்பி தேம்பி அழுத ஆடு

உரிமையாளரை கட்டிப்பிடித்து தேம்பி, தேம்பி ஆடொன்று அழுத சம்பவம் தொடர்பில் வீடியோ, சமூக வலைத்தளங்களில் வைரலாகியுள்ளது. “ஈரக்குலையே” நடுங்கி போச்சு ஆட்டின் உரிமையாளரும் தெரிவித்துள்ள அந்த வீடியோவை பார்ப்போரின் இதயத்தையும் அந்தக்காட்சிகள் துளைத்தெடுத்து கொண்டிருக்கின்றது.

பக்ரீத் பண்டிகை அன்று ஆடுகள் பலி கொடுப்பது முக்கிய வழக்கமாக பார்க்கப்படும். கடந்த 13 ஆம் திகதி பக்ரீத் பண்டியாகும். கால்நடை சந்தைகளில் ஆடுகள் விற்பனை ஜரூராக நடந்தது.

மகாராஷ்டிரா மாநிலம் கவுசர்பாக் சந்தையில் ஆடு ஒன்று ரூ.8 லட்சத்துக்கு விற்பனையாகியுள்ளது.

அதேபோல, இந்த 2 நாட்களாக ஒரு ஆடு வீடியோ வைரலாகி கொண்டிருக்கிறது. இது எந்த ஊரில் நடந்தது என்று தெரியவில்லை.. குர்பானிக்காக இந்த ஆட்டை விற்பதற்காக, அதன் உரிமையாளர் சந்தைக்கு அழைத்து வந்தார். விலைபேசி பணத்தையும் பெற்றுக்கொண்டார். பணம் கொடுத்தவர் ஆட்டை கிளப்பிக்கொண்டு போக முயன்றார்.

அப்போது திடீரென உரிமையாளரை கட்டிப்பிடித்த ஆடு, கதறியழ ஆரம்பித்துவிட்டது. அந்த ஆட்டை சமாதானப்படுத்த உரிமையாளர் முயற்சித்த போதும் அது முடியவில்லை. விக்கி, விக்கி அழுத ஆடு, அழுகையை நிறத்தவே இல்லை.

சந்தையில் இருந்தவர்களும் கண்கலங்கினர், உரிமையாளரும் கண்கலங்கினார். பணத்தை கொடுத்தவரிடமே மீளவும் பணத்தைக் கொடுத்த உரிமையாளர் ஆட்டை வீட்டுக்கு அழைத்துச் சென்றுவிட்டார்.

சென்னை

### சிறுமி கருமுட்டை விற்பனை விவகாரம்

## மருத்துவமனைகளை மூட நடவடிக்கை

சிறுமியிடம் கருமுட்டை தானம் என்ற பெயரில் சட்டத்துக்கு புறம்பாக கருமுட்டை விற்பனை நடந்த விவகாரம் தமிழ்நாட்டில் பரபரப்பை ஏற்படுத்தியது.

இதுதொடர்பாக, தனியார் மருத்துவமனைகளில் பொலிஸார் மற்றும் தமிழ்நாடு அரசின் மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இயக்கத்தின் தலைவர் தலைமையிலான மருத்துவக்குழுவினர் தொடர் விசாரணை நடத்தி வருகிறார்கள்.

> **“6 மருத்துவமனைகள் ஐசிஎம்ஆர் விதிகளை மீறி செயல்பட்டுள்ளன. சம்பந்தப்பட்ட தனியார் மருத்துவமனைகளை நிரந்தரமாக மூட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது**

இதுதொடர்பாக 16 வயது சிறுமியின் முறைப்பாட்டின் பேரில், அவருடைய தாயார், தாயாரின் இரண்டாவது கணவர், தரகர், போலி ஆதார் அட்டை வழங்கியவர் என நால்வர் கைது செய்யப்பட்டுள்ளனர்.



சென்னை தேனாம்பேட்டையில் பேட்டி அளித்த மா.சுப்பிரமணியன் சிறுமியின் உண்மையான பெயர், வயதை மறைத்து கருமுட்டை தானம் பெறப்பட்டுள்ளது.

அடையாளத்துக்காக பெறப்பட்ட ஆதார் அட்டை போலியாக உள்ளது. போலியென தெரிந்தும் மருத்துவமனைகள் பயன்படுத்தி உள்ளன. கருமுட்டை தானம் குறித்த சாதக, பாதகங்கள் சிறுமியிடம் முறையாக விளக்கப்படவில்லை. விசாரணைக்கான ஆவணங்களை மருத்துவமனைகள் முறையாக கொடுக்கவில்லை. கருமுட்டை விவகாரத்தில், 6 மருத்துவமனைகள் ஐசிஎம்ஆர் விதிகளை மீறி செயல்பட்டுள்ளன என்று தெரிவித்த அவர், சம்பந்தப்பட்ட தனியார் மருத்துவமனைகளை நிரந்தரமாக மூட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றார்.

சென்னை

## “அந்த” ஆப்பை திறந்த குரங்கு

குரங்கு ஒன்று கையடக்க தொலைப்பேசிகளை பயன்படுத்தும் வீடியோ இணையம் முழுக்க தீயாக பரவி வருகிறது. மனிதர்களை போல தற்போது விலங்குகளும் கையடக்க தொலைபேசிகளுக்கு அடிமையாக தொடங்கிவிட்டன.


அமெரிக்காவில் சிகாகோவில் இருக்கும் லிங்கன் பார்க் விலங்குகள் சரணாலயத்தில் கொரில்லா குரங்கு ஒன்று கையடக்க தொலைபேசிக்கு அடிமையானதாக செய்திகள் வந்தன.

16 வயது நிரம்பிய அமேரா என்ற குரங்கு கையடக்க தொலைபேசியை பார்க்க அடிமையாகி உள்ளது.

அங்கு மூன்று குரங்குகள் கையடக்க தொலைபேசியை பார்ப்பதில் அதிக ஆர்வம் காட்டுகின்றன. அதிலொரு குரங்கு பேஸ்புக் செயலியை திறந்து உள்ளது. தெரிந்து திறந்ததோ, தெரியாமல் திறந்ததோ தெரியவில்லை.. ஆனால் பேஸ்புக்கை திறந்து அதை பயன்படுத்த செய்ய தொடங்கி உள்ளது. நீண்ட நேரம் அந்த பேஸ்புக் பக்கத்தை குரங்கு பார்த்துள்ளது.

ஜோசப் ஃபிரேசரினால்

# பிரத்தியேகமான சேவைகள்



ஜோசப் ஃபிரேசர் ஞாபகார்த்த வைத்தியசாலை, பிரசவத்துக்காக நோயாளர் தங்கியிருக்கும் பகுதியில் குழந்தைப் பிரசவிக்கும் வசதியை அறிமுகம் செய்துள்ளது. அதனூடாக வீடுகளில் பிரசவம் இடம்பெறுவதைப் போன்ற பிரத்தியேக அனுபவத்தையும், நீரினுள் பிரசவம் போன்ற அனுபவத்தை முதன் முறையாக வழங்கவும் முன்வந்துள்ளது.

அடுத்தாண்டில் நூற்றாண்டு கால பூர்த்தியை கொண்டாடும் ஜோசப் ஃபிரேசர், 2018 ஆம் ஆண்டில், புகழ்பெற்ற வர்த்தகப் பிரமுகரான ஹெரி ஜயவர்தனவின் நிர்வாகத்தின் கீழ் இயங்கும் இலங்கையின் முன்னணி பன்முகப்படுத்தப்பட்ட சிறந்த 10 பட்டியலிடப்பட்ட நிறுவனங்களில் ஒன்றான Melstacorp PLC இன் முழு உரிமையாண்மையில் இயங்கும் துணை நிறுவனமான Melsta Health இனால் கையகப்படுத்தப்பட்டிருந்ததன் பின்னர் பல மேம்படுத்தல்களை எய்தியுள்ளது.

பெண்களுக்கு ஒப்பற்ற பராமரிப்பை பெற்றுக் கொடுக்கும் வகையில் ஜோசப் ஃபிரேசர் வசதிகளைக் கொண்டுள்ளது. இதில் பெண்நோயியல் மற்றும் ஆலோசனை சேவைகள், குழந்தை நலன், பூப்பெய்தல் மற்றும் மாதவிடாய் நிறுத்தம் மற்றும் இதர பல சேவைகளும் அடங்குகின்றன.

வைத்தியசாலை தனது பாரம்பரிய தோற்றத்தையும், அதிகளவு உள்ளக இடவசதிகளையும் பேணி, புனருத்தாரண நடவடிக்கைகளை மேற்கொண்டு, புதிய தொழில்நுட்ப வசதிகளையும், உலகத் தரம் வாய்ந்த சுகாதார பராமரிப்பு வசதிகளையும் உள்வாங்கியிருந்தது. மூன்றறை ஏக்கர் காணிப்பகுதியில் இரம்மியமான தோட்டத்துக்கு மத்தியில் அமைந்துள்ள இந்த வைத்தியசாலை, இயற்கையுடன் ஒன்றித்ததாக அமைந்துள்ளது.

Melsta Health (Pvt) Ltd இன் வைத்தியசாலைகள் திட்டத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி வைத்தியர் கே. தியாகராஜா இறைவன் கருத்துத் தெரிவிக்கையில், “ஜோசப் ஃபிரேசரைப் பொறுத்தமட்டில் எமது இலக்கானது, இலங்கையில் பிரத்தியேகமான சுகாதாரப் பராமரிப்பு வசதிகளை வழங்கும் வைத்தியசாலையாக திகழ்வதாகும். அதனூடாக, நாடு முழுவதிலும் வேகமாக விஸ்தரிக்கப்பட்ட வண்ணமுள்ள, சுகாதார பராமரிப்புத் துறையில் Melsta Hospitals மற்றும் Melsta Laboratories ஆகியவற்றுடன் இணைந்து புரட்சிகரமான மாற்றத்தை ஏற்படுத்துவதற்கு முன்வந்துள்ளோம். சகலருக்கும் இலகுவில் சகாயமான முறையில் பெற்றுக் கொள்ளக்கூடிய சிறந்த பராமரிப்பு சேவைகளைப் பெற்றுக் கொடுப்பதற்கு நாம் தொடர்ந்தும் அர்ப்பணிப்புடன் செயலாற்றுவோம்.” என்றார்.

பாரம்பரிய பிரசவ அறையில் பிரசவிப்பதற்கு மாறாக, பிரத்தியேக அறையினுள் பிரசவிக்கும் வசதியினூடாக, தாய்மாருக்கு அழுத்தமில்லாத சூழலில், தமது குடும்பத்தாருடன் பிரசவிக்கும் வசதி வழங்கப்படுகின்றது. இந்த வசதி சகாயமான விலையில் அமைந்துள்ளது. இவை உயர்ந்த வசதியைக் கொண்டிருப்பதுடன், பரந்தளவு வசதிகளுடன், பிரத்தியேகமான பெல்கனியைக் கொண்டுள்ளதுடன், அதனூடாக பசுமையான தோட்டப்பகுதியை பார்வையிடும் வசதியினூடாக மனதுக்கு ஆறுதல் சேர்க்கப்படுகின்றது.

கடுமையான மேற்பார்வையின் கீழ், உயர் மருத்துவ நியமங்களைப் பின்பற்றி, பிரித்தானிய மருத்துவமாதுவின் நிபுணத்துவம் வாய்ந்த வழிகாட்டலின் கீழ் பிரசவம் மேற்கொள்ளப்படுகின்றது. இவர் வைத்தியசாலையின் மருத்துவ ஆலோசகராகவும் திகழ்கின்றார். ஊழியர்கள் மற்றும் தாதியர்கள் முறையான பயிற்சிகளைப் பெற்றுள்ளதுடன், முழு பிரசவ செயன்முறையின் போது வழங்கப்பட வேண்டிய உச்ச பராமரிப்பை வழங்குவதை உறுதி செய்கின்றனர். நீரினுள் பிரசவம் அல்லது நீச்சல் தடாக பிரசவம் போன்ற தெரிவையும் மேற்கொள்ளும் வசதி பிரசவத்தை எதிர்பார்ப்போருக்கு வைத்தியசாலை வழங்குகின்றது.

ஜோசப் ஃபிரேசர் பொது முகாமையாளர் ரொஷிற்றா நிறோஷன் கருத்துத் தெரிவிக்கையில், “பிரசவ பராமரிப்பு சேவைகளை வழங்குவதில் முன்னோடியாக அமைந்திருப்பதுடன், இலங்கையில் நோயாளர்களுக்கு பிரசவ அறைகளை சிகிச்சைக்காக வழங்கும் வசதியை அறிமுகம் செய்த முதல் வைத்தியசாலையாக அமைந்துள்ளது. இவை சகாயமான விலையில் அமைந்துள்ளன. சவால்கள் நிறைந்த காலப்பகுதியிலும் தொடர்ச்சியாக சேவைகளை பெற்றுக் கொடுப்பது தொடர்பில் நாம் தொடர்ந்து இயங்குவதுடன், பாரம்பரியத்துக்கு அப்பால் சென்று சேவைகளைப் பெற்றுக் கொடுக்கின்றோம்.” என்றார்.


1923 ஆம் ஆண்டு நிறுவப்பட்ட, ஜோசப் ஃபிரேசர் ஞாபகார்த்த வைத்தியசாலை இலங்கையில் நீண்ட காலமாக இயங்கும் சுகாதார பராமரிப்பு சேவைகளை வழங்கும் வைத்தியசாலையாக அமைந்துள்ளது. பழங்கால வடிவமைப்பு, பசுமையான தோட்டம், திறந்த வெளி உணவகம் மற்றும் இயற்கை ஒளியூட்டல் மற்றும் ஒலியமைப்பு போன்றன சிறந்த அனுபவத்தை வழங்குவதாக அமைந்துள்ளன.

# கொமர்ஷல் வங்கியின் பன்மொழி பயன்பாட்டில் ePassbook

‘ComBank ePassbook’ டிஜிட்டல் வங்கிப்பழக்கத்தை மேலும் ஊக்குவிப்பதற்காகவும் வாடிக்கையாளர் அனுபவத்தை மேம்படுத்துவதற்காகவும் ஆங்கிலத்திற்கு மேலதிகமாக சிங்களம் மற்றும் தமிழிலும் இப்போது பயன்பாட்டிலுள்ளது என கொமர்ஷல் வங்கி அறிவித்துள்ளது.

ComBank ePassbook செயலியானது இப்பொழுது அனைத்து தங்கள் வங்கிப் பரிவர்த்தனைகளைப் பார்ப்பதற்கு அணுகுவதற்கும் கொமர்ஷல் வங்கி வாடிக்கையாளர்களுக்கு விருப்பமான மொழியைத் தேர்ந்தெடுக்கவும் உதவுகிறது.

வங்கியின் அனைத்து வாடிக்கையாளர் பிரிவுகளையும் டிஜிட்டல் மயமாக்குவதற்கும் டிஜிட்டல் நிதி உள்ளடக்கத்தை மேம்படுத்துவதற்கும் ComBank ePassbook ஐ மும்மொழியாக்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டதாக வங்கி தெரிவித்துள்ளது.



2020 ஆம் ஆண்டில், ComBank ePassbook ஆனது சுய-பதிவு திறன்கள், நிகழ்நேர பரிவர்த்தனை அறிவிப்புகள் மற்றும் பயோமெட்ரிக் உள்நுழைவு அம்சத்தை உள்ளடக்கியதாக மேம்படுத்தப்பட்டது, இது கணக்கு வைத்திருப்பவர்கள் ஒவ்வொரு உள்நுழைவிலும் கடவுச்சொல்லை உள்ளிடாமல், முக அடையாளம் மற்றும் கைரேகை மூலம் செயலிபை பயன்படுத்தவும் உதவும். சுய-பதிவு அம்சத்தை அறிமுகப்படுத்திய ஆறு மாதங்களுக்குள் ComBank ePassbook பதிவிறக்கம் 150,000 அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. ComBank ePassbook 200 க்கும் மேற்பட்ட நாடுகளில் பயனர்களைக் கொண்டுள்ளது, சராசரியாக 30 நிமிடங்களுக்கு 10,000 க்கும் மேற்பட்ட பயன்பாட்டிலுள்ள பயனர்கள் மற்றும் 1 மில்லியனுக்கும் அதிகமான வாடிக்கையாளர் பதிவுகளைக் கொண்டுள்ளதாக வங்கி தெரிவித்துள்ளது.

இந்த மொபைல் செயலி, Android மற்றும் iOS இயங்கும் மொபைல் சாதனங்களில் சேமிப்பு, நடப்பு, NRFC, RFC கணக்குகள் மற்றும் கிரெடிட் கார்டுகளின் விபரங்களுக்கு அணுகலை வழங்குகிறது மற்றும் ஒவ்வொரு கணக்கையும் தனித்தனியாக பார்க்கும் திறனுடன், கணக்கு வைத்திருப்பவரால் பதிவுசெய்யப்பட்ட பல கணக்குகளுக்கு ஒரே களஞ்சியமாக செயல்படுகிறது. ComBank ePassbook iOS மொபைல் பயன்பாடு, சமீபத்திய மேக்புக்களிலும் டெஸ்க்டாப் பயன்பாடாக இயங்கக்கூடியது.

கீவ்

அதிநவீன ஏவுகணைகள் தாக்குதலில்

# 420 உக்ரேன் வீரர்கள் கொன்று குவிப்பு

அதிநவீன ஏவுகணை தாக்குதல் மூலமாக உக்ரேனில் ஒரே நாளில் 420 உக்ரேன் இராணுவ வீரர்கள் கொல்லப்பட்டிருப்பது பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. உக்ரேன் மீதான ரஷ்யாவின் உக்கிரமான போர் 130 நாட்களை கடந்தும் தொடர்ந்து வருகிறது. கிழக்கு உக்ரேனை கைப்பற்றுவதற்காகவே வேகமாக முன்னேறி வரும் ரஷ்ய படைகள் நாட்டில் பிற பகுதிகளிலும் தாக்குதல்களை தீவிரப்படுத்தி வருகின்றனர். இந்நிலையில் தெற்கு உக்ரேனில் இருக்கும் மைக்கோலைவ் நகரில் ரஷ்ய படைகள் நடத்திய தாக்குதல்களில் ஒரே நாளில் 420 உக்ரேன் வீரர்கள் உயிரிழந்துவிட்டதாக ரஷ்யா தெரிவித்துள்ளது.



நியூயோர்க்



## அமெரிக்காவில் 9.1% பணவீக்கம்

அமெரிக்காவின் சில்லறை பணவீக்கம் 9.1 சதவீதமாக அதிகரித்துள்ளது.

உக்ரேன் போர் மற்றும் சீனாவில் கொரோனா தொற்று அதிகரிப்பு போன்ற காரணங்களால் உலகளவில் விநியோகச் சங்கிலி பாதிக்கப்பட்டு பொருட்களின் விலை கடுமையாக உயர்ந்து வருகிறது. இதனால் அமெரிக்கா உட்பட பல நாடுகளில் பணவீக்கம் கடுமையாக அதிகரித்து வருகிறது.

பணவீக்கத்தைக் கட்டுப்படுத்த அமெரிக்காவின் மத்திய வங்கியான பெடரல் வங்கி கடுமையான நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. தொடர்ந்து வட்டி சதவீதத்தை பெடரல் வங்கி உயர்த்தி வருகிறது. இது இன்னமும் கடுமையாகும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதன் தாக்கம் தங்கத்தில் எதிரொலிக்கிறது.

மெக்சிகோ



## 14 வயது மாணவன் மீது சகமாணவர்கள் வெறிச்செயல்

மெக்சிகோவில் இனம் மற்றும் மொழி பாகுபாட்டால் பாடசாலை வகுப்பறையில் வைத்து பழங்குடி இனத்தை சேர்ந்த மாணவர் ஒருவரை இரண்டு மாணவர்கள் தீவைத்த கொடூர சம்பவம் நடந்துள்ளது.

மெக்சிகோ நாட்டில் இனபாகுபாடு தொடர்பான பிரச்சனைகள் அடிக்கடி நடந்து வருகிறன்றன. இதனை தடுக்க அந்நாட்டு அரசும் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

மேலும் மெக்சிகோவில் இனப்பாகுபாட்டை தடுக்க சட்டம் மற்றும் தனி அமைப்புகள் உள்ளன. இருப்பினும் ஆங்காங்கே இனபாகுபாடு தொடர்பான தாக்குதல் நடத்தப்பட்டு வருகின்றன.

2018 ஆம் ஆண்டில் தேசிய புள்ளியியல் நிறுவனம் வெளியிட்ட விபரங்கள் அடிப்படையில் நாட்டில் சுமார் 40 சதவீத பழங்குடியின மக்கள் இனபாகுபாட்டு பிரச்சனையை எதிர்கொள்வதாக குறிப்பிட்டு இருந்தது. இது தற்போதும் தொடர்ந்து வருகிறது. கடந்த மார்ச் மாதம் ஒட்டோமி எனும் பழங்குடி பெண் மெக்சிகோ சிட்டியில் உள்ள ஹோட்டலில் கழிவறையை பயன்படுத்த அனுமதி மறுக்கப்பட்டது. இதன் தொடர்ச்சியாக தான் தற்போது ஒட்டோமி பழங்குடி வகுப்பை சேர்ந்த 14 வயது மாணவர் மீது தீவைக்கப்பட்டுள்ள சம்பவம் நடந்துள்ளது.

வொஷிங்டன்

## பால்வெளி கிரகத்தில் தண்ணீருக்கு அறிகுறி

'பால்வெளி மண்டலத்தில் சுற்றி வரும் கிரகத்தில் தண்ணீர் இருப்பதற்கான அறிகுறிகள் தென்படுவதை ஜேம்ஸ் வெப் தொலைநோக்கி கண்டறிந்துள்ளது,' என நாசா தெரிவித்துள்ளது.

பூமியில் இருந்து 10 இலட்சம் மைல் தொலைவில் நிலை நிறுத்தப்பட்டுள்ள நாசாவின் ஜேம்ஸ் வெப் தொலைநோக்கி எடுத்த பிரபஞ்சத்தின் முதலாவது வண்ணப்படம் வெளியானது. இதன் மூலம், 1300 ஒளி ஆண்டுகளுக்கு முந்தைய பிரபஞ்சத்தின் தோற்றத்தை அறிய முடிந்தது. இந்த புகைப்படம் உலகளவில் பெரிய பிரமிப்பை ஏற்படுத்தி இருக்கிறது.

இந்நிலையில், பால்வெளி



மண்டலத்தில் 5 ஆயிரத்துக்கும் மேற்பட்ட சிறுகிரகங்கள் சுற்றி வருகின்றன. இவை, 1,150 ஒளி ஆண்டுகள் தொலைவில் உள்ளன. அங்குள்ள சூரியனைப் போன்ற நட்சத்திரத்தை சுற்றி வரும் இந்த கிரகங்களில், வாஸ்ப்-96 பி என்ற கிரகமும் ஒன்று. இதில், தண்ணீர் இருப்பதற்கான அறிகுறிகள் இருப்பதை ஜேம்ஸ் வெப் தொலைநோக்கி கண்டறிந்துள்ளதென நாசா தெரிவித்தது.

ஜேர்மனி



## சுடுதண்ணி வாங்க முடியாத நிலை

ஐரோப்பாவின் மிகப்பெரிய பொருளாதார நாடான ஜெர்மனி, ரஷ்யா-உக்ரேன் போருக்கு பின்பு அதிகளவில் பாதிக்கப்பட்டு உள்ளது.

அமெரிக்க, பிரிட்டன் நாடுகளுடன் சேர்ந்து உக்ரேன் மீதான ரஷ்யாவின் போர் தொடுத்ததைக் கண்டித்துப் பாதுகாப்புக்காக ரஷ்யா மீது கடுமையான வர்த்தகத் தடைகளை விதித்தது.

இதேவேளையில் அமெரிக்கா, பிரிட்டன் நாடுகளைக் காட்டிலும் ஜெர்மனி தான் ரஷ்யாவுடனும், உக்ரேன் உடனும் அதிகப்படியான வர்த்தகம் செய்து வருகிறது.

உணவுப் பொருட்கள் முதல் கச்சா எண்ணெய் வரையில் ஜெர்மனி ரஷ்யாவை நம்பிதான் உள்ளது.

பணவீக்கம் மற்றும் விலைவாசி உலக நாடுகளை வாடிவதைத்து வரும் நிலையில் ஜெர்மனி போன்ற முன்னணி பொருளாதார நாட்டில் சுடு தண்ணீர் கூட ஆடம்பரமான ஒன்றாக மாறப்போகும் சூழ்நிலை உருவாகியிருப்பது

நாட்டின் எரிபொருள் பற்றாக்குறை மிகவும் அதிகமாகியுள்ள நிலையில் வெந்நீர் இனி அளந்து அளந்து தான் கொடுக்க முடியுமென ஜெர்மனி நாட்டின் துறைமுக நகரமான ஹாம்பர்க், முன்கூட்டியே எச்சரித்துள்ளது.

வொஷிங்டன்

## புதிய 2 வைரஸ்கள் வேகமாக பரவுகின்றன

அமெரிக்காவில் இதுவரை மொத்தம் 8 கோடியே 86 லட்சம் பேர் கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர். இந்நிலையில் BA.4 மற்றும் BA.5 என பெயரிடப்பட்ட இரண்டு புதிய வகை கொரோனா தொற்றுகள் வேகமாக பரவுவதாக அமெரிக்க சுகாதாரத்துறை எச்சரித்துள்ளது.

இது ஓமிக்ரோன் வகையை சேர்ந்தது என்றும் இதற்கு முந்தைய தொற்றுகளை விட வீரியம் வாய்ந்தது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் அமெரிக்க மக்கள் முகக்கவசம் அணிதல் உள்ளிட்ட கொரோனா கட்டுப்பாடுகளை கடைப்பிடிப்பதுடன், பூஸ்டர் தடுப்பூசிகளை போட்டு கொள்ளுமாறு வெள்ளை மாளிகை அறிவுறுத்தி உள்ளது.

மேற்கிந்தியத் தீவுகளுக்கெதிரான

# தொடரைக் கைப்பற்றிய பங்களாதேஷ்

மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான ஒருநாள் சர்வதேசப் போட்டித் தொடரை பங்களாதேஷ் கைப்பற்றியது.

மூன்று போட்டிகள் கொண்ட இத்தொடரின் முதலாவது போட்டியில் ஏற்கெனவே வென்றிருந்த பங்களாதேஷ், கயானாவில் நேற்று முன்தினமிரவு நடைபெற்ற இரண்டாவது போட்டியையும் வென்றமையைத் தொடர்ந்தே இன்னும் ஒரு போட்டி மீதமிருக்கையிலேயே தொடரைக் கைப்பற்றியது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: பங்களாதேஷ்

மே. தீவுகள்: 108/10 (35 ஓவ. ) (துடுப்பாட்டம்: கீமோ போல் ஆ.இ 25 (24) ஓட்டங்கள்.



பந்துவீச்சு: மெஹிடி ஹஸன் மிராஸ் 4/29, நசும் அஹ்மட் 3/19, ஷொரிஃபுல் இஸ்லாம் 1/9, மொஷாடெக் ஹொஸைன் 1/37)

பங்களாதேஷ்: 112/1 (20.4 ஓவ. ) (துடுப்பாட்டம்: தமிம் இக்பால் ஆ.இ 50 (62), லிட்டன் தாஸ் ஆ.இ 32 (27) ஓட்டங்கள்)

போட்டியின் நாயகன்: நசும் அஹ்மட்

## முதலாமிடத்துக்கு முன்னேறிய பும்ரா

சர்வதேச கிரிக்கெட் சபையின் ஒருநாள் சர்வதேசப் போட்டிகளுக்கான பந்துவீச்சாளர்களின் தரவரிசையில் முதலாமிடத்துக்கு இந்தியாவின் ஜஸ்பிரிட் பும்ரா முன்னேறியுள்ளார்.

இங்கிலாந்துக்கெதிரான முதலாவது போட்டியில் 6 விக்கெட்டுகளைக் கைப்பற்றியதைத் தொடர்ந்தே ஐந்தாம் இடத்திலிருந்து நான்கு இடங்கள் முன்னேறி முதலாமிடத்தை பும்ரா அடைந்துள்ளார்.

இதேவேளை, மேற்கிந்தியத் தீவுகளுக்கெதிரான முதலாவது போட்டியில் 3 விக்கெட்டுகளைக் கைப்பற்றிய பங்களாதேஷின் மெஹிடி ஹஸன் மிராஸ், எட்டாமிடத்திலிருந்து இரண்டு இடங்கள் முன்னேறி ஆறாமிடத்தை அடைந்துள்ளார்.

முதல் 10 பந்துவீச்சாளர்களின் தரவரிசை பின்வருமாறு,

ஜஸ்பிரிட் பும்ரா, 2. ட்ரென்ட் போல்ட், 3. ஷகீன் ஷா அஃப்ரிடி, 4. ஜொஷ் ஹேசில்வூட், 5. முஜீப் உர் ரஹ்மான், 6. மெஹிடி ஹஸன் மிராஸ், 7. கிறிஸ் வோக்ஸ், 8. மற் ஹென்றி, 9. மொஹமட் நபி, 10. ரஷீட் கான்.

முதல் 10 துடுப்பாட்டவீரர்களின் தரவரிசை பின்வருமாறு,

பாபர் அஸாம், 2. இமாம்-உல்-ஹக், 3. விராட் கோலி, 4. றோஹித் ஷர்மா, 5. குயின்டன் டி கொக், 6. றஸி வான் டர் டுஸன், 7. றொஸ் டெய்லர், 8. ஜொனி பெயார்ஸ்டோ, 9. டேவிட் வோர்னர், 10. ஆரோன் பின்ஞ்.

இந்நிலையில், இங்கிலாந்துக்கெதிரான மூன்று இருபதுக்கு 20 சர்வதேசப் போட்டிகளிலும் 172 ஓட்டங்களைப் பெற்ற இந்தியாவின் சூரியகுமார் யாதவ், துடுப்பாட்டவீரர்களின் தரவரிசையில் 49ஆம் இடத்திலிருந்து 44 இடங்கள் முன்னேறி ஐந்தாமிடத்தை அடைந்துள்ளார்.

இதேவேளை, பங்களாதேஷுக்கெதிரான மூன்றாவது போட்டியில் 74 ஓட்டங்களைப் பெற்ற மேற்கிந்தியத் தீவுகளின் நிக்கலஸ் பூரான், 13ஆம் இடத்திலிருந்து ஐந்து இடங்கள் முன்னேறி எட்டாமிடத்தை அடைந்துள்ளார்.

முதல் 10



துடுப்பாட்டவீரர்களின் தரவரிசை பின்வருமாறு,

பாபர் அஸாம், 2. மொஹமட் றிஸ்வான், 3. ஏய்டன் மார்க்ரம், 4. டேவிட் மலான், 5. சூரியகுமார் யாதவ், 6. ஆரோன் பின்ஞ், 7. டெவோன் கொன்வே, 8. நிக்கலஸ் பூரான், 9. பதும் நிஸங்க, 10. மார்டின் கப்தில், றஸி வான் டர் டுஸன்.

இதேவேளை, இங்கிலாந்துக்கெதிரான முதலிரண்டு போட்டிகளிலும் 4 விக்கெட்டுகளைக் கைப்பற்றிய இந்தியாவின் புவ்னேஷ்வர் குமார், 14ஆம் இடத்திலிருந்து ஏழு இடங்கள் முன்னேறி ஏழாமிடத்தை அடைந்துள்ளார்.

முதல் 10 பந்துவீச்சாளர்களின் தரவரிசை பின்வருமாறு,

ஜொஷ் ஹேசில்வூட், 2. அடில் ரஷீட், 3. ரஷீட் கான், தப்ரையாஸ் ஷம்சி, 5. அடம் ஸாம்பா, 6. வனிடு ஹஸரங்க, 7. புவ்னேஷ்வர் குமார், அன்றிச் நொர்ட்ஜே, 9. அகீல் ஹொஸைன், மகேஷ் தீக்ஷன.

இந்நிலையில், அவுஸ்திரேலியாவுக்கெதிரான இரண்டாவது டெஸ்டில் 86 ஓட்டங்களைப் பெற்ற இலங்கையணியின் தலைவர் திமுத் கருணாரத்ன, எட்டாமிடத்திலிருந்து ஓரிடம் முன்னேறி ஏழாமிடத்தை அடைந்துள்ளார்.

முதல் 10 துடுப்பாட்டவீரர்களின் தரவரிசை பின்வருமாறு,

ஜோ றூட், 2. மர்னுஸ் லபுஷைன், 3. ஸ்டீவ் ஸ்மித், 4. பாபர் அஸாம், 5. றிஷப் பண்ட், 6. கேன் வில்லியம்ஸன், 7. திமுத் கருணாரத்ன, 8. உஸ்மான் கவாஜா, 9. றோஹித் ஷர்மா, 10. ஜொனி பெயார்ஸ்டோ.

இதேவேளை, குறித்த டெஸ்டில் 4 விக்கெட்டுகளைக் கைப்பற்றிய அவுஸ்திரேலியாவின் மிற்செல் ஸ்டார்க், 12ஆம் இடத்திலிருந்து இரண்டு இடங்கள் முன்னேறி 10ஆம் இடத்தை அடைந்துள்ளார்.



பாகிஸ்தானுக்கெதிரான டெஸ்ட் தொடருக்கான

## இலங்கைக் குழாமில் ஜெயவிக்கிரம இல்லை

பாகிஸ்தானுக்கெதிரான டெஸ்ட் தொடருக்கான இலங்கைக் குழாமில் சுழற்பந்துவீச்சாளர் ஜெயவிக்கிரம இடம்பெறவில்லை.

தவிர, அவுஸ்திரேலியாவுக்கெதிரான இரண்டாவது டெஸ்டுக்கான இலங்கைக் குழாமில் இடம்பெற்றிருந்த லக்ஷித மனசிங்கே, சாமிக கருணாரத்னவும் குழாமில் இடம்பெறவில்லை.

குழாம்: திமுத் கருணாரத்ன (அணித்தலைவர்), பதும் நிஸங்க, ஓஷாத பெர்ணாண்டோ, அஞ்சலோ மத்தியூஸ், குசல் மென்டிஸ், தனஞ்சய டி சில்வா, கமிந்து மென்டிஸ், நிரோஷன் டிக்வெல்ல (விக்கெட் காப்பாளர்), தினேஷ் சந்திமால், ரமேஷ் மென்டிஸ், மகேஷ் தீக்ஷன, கசுன் ராஜித, விஷ்வ பெர்ணாண்டோ, அசித பெர்ணாண்டோ, டில்ஷான் மதுஷங்க, பிரபாத் ஜெயசூரிய, டுனித் வெல்லலாகே, ஜெஃப்ரி வன்டர்சே.



மாகாண மட்டத்துக்கு

## நிந்தவூர் அல்-அஷ்ரக்கிலிருந்து 19 மாணவர்கள்

■ நூருல் ஹுதா உமர்

கல்முனை வலய மட்ட மெய்வல்லுநர் போட்டிகளில் 15 தங்கப் பதக்கங்கள், ஒன்பது வெள்ளிப் பதக்கங்கள் வென்று மொத்தமாக 19 மாணவர்கள், நிந்தவூர் அல்-அஷ்ரக் தேசிய பாடசாலையிலிருந்து மாகாண மட்டப் போட்டிகளுக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

கல்முனை உவெஸ்லி உயர்தரப் பாடசாலை மைதானத்தில் அண்மையில் நடைபெற்ற இப்போட்டிகளில் அல்-அஷ்ரக் பாடசாலை 16 வயதுப் பிரிவு மாணவன் எம். அப்ஸீத் அஹமட் சம்பியனானமை குறிப்பிடத்தக்கது.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் வெள்ளிக்கிழமை, 15 ஜூலை 2022, இல. 8, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது